பக்கங்கள்: 12

விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | பங்குனி 04 | திங்கட்கிழமை [illegible]03.2019 | கதிர் 134

இது ரகசியம் அல்ல!

நேற்றுமுன்தினம் 'பகிடி வதை' கொடூரம் குறித்து இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா?

எதிர்பாராத பக்கங்களில் இருந்தெல்லாம் அந்தப் பத்தியை மெச்சி, பாராட்டி, தொலைபேசி அழைப்புகள் வந்தன.

பக்கம் 02 >>>



## ஜெனீவாவில் புதிய பிரேரணைக்காக பிரிட்டனுக்குக் கூட்டமைப்பு நன்றி

### நேரில் சென்று தெரிவித்தார் சுமந்திரன்

லண்டன், மார்ச் 18

ஜெனீவாவில் நடைபெறும் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் தற்போதைய – நாற்பதாவது – கூட்டத் தொடரில் இலங்கை மீதான சர்வதேசக் கண்காணிப்பை இடையறாது தொடர்வதற்கு வழி செய்யும் விதத்தில் இலங்கை தொடர்பாகப் புதிய பிரேரணை ஒன்றைத் தானே முன்னின்று அனுசரணைப் பணி வகித்துக் கொண்டுவருவதற்கு பிரிட்டன் எடுத்த முயற்சிகளுக்காக அந்த நாட்டுக்கு நன்றி தெரிவித்திருக்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

கூட்டமைப்பின் பேச்சாளரும் எம்.பியுமான எம்.ஏ.சுமந்திரன் நேரடியாக லண்டனில் சம்பந்தப்பட்ட உயரதிகாரியைச் சந்தித்து கூட்டமைப்பின் நன்றியைத் தெரிவித்தார்.

பக்கம் 11 >>>

## அதிநவீன வசதிகள் கொண்டதாக மாறும் சுன்னாகம் பொதுச்சந்தை!



யாழ்ப்பாணம், மார்ச் 18

சுன்னாகம் பொதுச் சந்தை அதிநவீன வசதிகள் கொண்ட சந்தைக் கட்டடம் தொகுதியாக மாற்றப்படவுள்ளது. இதற்காகப் பெருநகர

பக்கம் 11 >>>

## பட்ஜெட்டைத் தோற்கடிக்கும் வாய்ப்பைத் தவறவிட்டது சு.க.

### மஹிந்த ராஜபக்ஷ ஆதங்கம்

மக்களுக்கு விரோதமான வரவு செலவுத் திட்டத்தை தோற்கடிப்பதற்குக் கிடைத்த வாய்ப்பு சிறிலங்கா சுதந்திர கட்சியால் இழக்கப்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

(விரிவான செய்தி 3ஆம் பக்கத்தில்)

## கிளிநொச்சி மைதானத்தின் இரு பகுதிகள் நேற்று திறப்பு



கிளிநொச்சி, மார்ச் 18

கிளிநொச்சி விளையாட்டு மைதானத்தின் நீச்சல் தடாகம் மற்றும் உள்ளக விளையாட்டு அரங்கு நேற்றுத் திறந்து வைக்கப்பட்டன.

பக்கம் 11 >>>

## மன்னார் மனிதப் புதைகுழி; இறுதி முடிவு வெள்ளியன்று

கொழும்பு, மார்ச் 18

மன்னார் நகர நுழைவாயிலில், சதொசவளாகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப்புதைகுழிதொடர்பாக, எதிர்வரும் மார்ச் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை இறுதி முடிவு

பக்கம் 11 >>>

## கோட்டா ஜனாதிபதியாவதை விரும்பவில்லை இந்திய அரசு

### நேரில் வந்து மஹிந்தவிடம் சொன்னார் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர்!

கொழும்பு, மார்ச் 18

கோட்டாபாயராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதை இந்தியா விரும்பவில்லை. அவருக்குப் பதி

பக்கம் 11 >>>

## கஞ்சாவுடன் இருவர் திருநகரில் சிக்கினர்!

யாழ்ப்பாணம், மார்ச் 18

கஞ்சா போதைப்பொருளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் யாழ்ப்பாணம் திருநகர் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு

பக்கம் 11 >>>

## விபத்தில் கணவன் சாவு! படுகாயமுற்றார் மனைவி!!

### மன்னாரில் நேற்றுத் துயரம்

மன்னார், மார்ச் 18

பாரவூர்தி – மோட்டார் சைக்கிள் மோதி ஏற்பட்ட விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பத் தலைவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவருடன் பயணித்த மனைவி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்

பக்கம் 11 >>>



## போரின் பின்னரே இராணுவம் உரிமை மீறல்களில் ஈடுபட்டது

### சரத் பொன்சேகா குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 18

யுத்தத்தின் பின்னரே இராணுவம் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டது என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்

பக்கம் 11 >>>

## ஊற்றங்கரைப் பிள்ளையார் ஆலயம் உடைத்துத் திருட்டு



முல்லைத்தீவு, மார்ச் 18

முல்லைத்தீவுமாவட்டத்தின் பிரசித்தி பெற்ற ஊற்றங்கரைப் பிள்ளையார் ஆலயம் உடைக்கப்பட்டு பத்து லட்சம் ரூபா பெறுமதியான ஆபரணங்கள் திருடப்பட்

பக்கம் 11 >>>

## ஜெனீவாவில் இன்று சிறிதரன் எம்.பி. உரை!

கொழும்பு, மார்ச் 18

ஜெனீவாவில் இடம்பெற்றுவரும் ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸில் கூட்டத் தொடரின் உபகுழு கூட்டத்தில் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் உரையாற்றவுள்ளார்.

பசுமை தாயக அமைப்பு ஏற்பாடு செய்துள்ள இந்த உப குழுக் கூட்டம், ஜெனீவா வளாகத்தி

பக்கம் 11 >>>

## ரூ.1 கோடி 33 லட்சம் பெறுமதியான கேரளக் கஞ்சாவுடன் இருவர் கைது

### பருத்தித்துறையில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

பருத்தித்துறை திக்கம் பகுதியில் சுமார் ஒரு கோடியே 30 லட்சம் பெறுமதியான 88 கிலோ 76 கிராம் எடையுடைய கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. அதனைக் கடத்த முயற்சித்தனர்

பக்கம் 11 >>>



விளம்பரம் மற்றும் செய்தி தொடர்பு
kalaikkathirnews@gmail.com
https://kalaikathir.online

காலைக்கதிர் Kalaikathir



# சேதமுற்ற நிலையில் பல ஆயுதங்கள் மடுகந்தைக் காட்டுப் பகுதியில் மீட்பு

வவுனியாவில் விசேட அதிர டிப்படையினரால் ஒரு தொகை ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

வவுனியா ஹொரவப்பொத் தானை வீதி மடுக்கந்தை குடா கச்ச கொடி காட்டுப்பகுதியிலி ருந்து பல ரக துப்பாக்கிகள் மற் றும் ஆயுதங்களை விசேட அதிரடிப்படையினர் நேற்று முன் தினம் மாலை 4 மணியளவில் மீட்டெடுத்துள்ளனர்.

குடாகச்சகொடி காட்டுப்பகுதி யில் மரக்கடத்தல், மண் அகழ்வு களை தடுக்கும் நோக்கில் மடுக் கந்தை விசேட அதிரடிப்படையினர் நேற்று மாலை விசேட சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன் போது காட்டுப்பகுதி யிலிருந்து பயன்படுத்த முடியாத நிலையில் சேதமடைந்து காணப்





பட்ட துப்பாக்கிகள் மற்றும் ஆயு தங்களை விசேட அதிரடிப்படையி னர் மீட்டனர்.

எம்.பி.என்.ஜி ரக துப்பாக்கி -59 , மோட்டர் துப்பாக்கி - 1 , 356ரக துப்பாக்கி - 5 , எல்.எம்.ஜி - 1 , எச்.கே7 துப்பாக்கி - 2 , 60மில்லி மீற்றர் மோட்டார் -1 , 356ரகமகஸின்-4ஆகியவற்றை மீட்டெடுத்த விசேட அதிரடிப்படை யினர் அவற்றை வவுனியா பொலிஸ்நிலையத்தில்ஒப்படைத்தனர்.

மீட்கப்பட்ட ஆயுதங்கள் விடுதலைப்புலிகளுடையவையா என்ற விசாரணை இடம்பெற்று வருகின்றனமீட்கப்பட்ட ஆயுதங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கைகளைத்தாங்கள்மேற் கொள்கின்றனர்எனப்பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# இலங்கை மீதான புதிய பிரேரணை வாக்கெடுப்பு இல்லாது நிறைவேறும்

கொழும்பு, மார்ச் 18

ஐக்கியநாடுகள்மனிதஉரிமை கள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாகமுன்வைக்கப்பட்டுள்ள புதிய பிரேரணை எதிர்வரும் 21 ஆம் திகதி வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்படவுள்ளது.

இந்தப்பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கவுள்ளதாக இலங்கையும் அறிவித்துள்ள நிலையில் பிரேரணை வாக் கெடுப்பின்றி ஏகமனதாக நிறை வேற்றப்படும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை இலங்கை தொடர்பானபிரேரணை பிரிட்டன், ஜேர்மன், கனடா உள்ளிட்ட ஐந்து நாடுகளினால் முன்வைக்கப்பட்டது. அதன்படி அந்தப் பிரேரணை 21 ஆம் திகதி விவாதத்திற்கு உட்படுத்தப்பட்டுப் பின்னர் நிறைவேற்றப்படும். பிரேரணையை நிறைவேற்றும் போது அதனைச் சமர்ப்பித்த நாடுகளும் இலங்கையும் உரை யாற்றவுள்ளன.

தற்போதுவரை இந்தப் பிரேர ணைக்கு இணை அனுசரணை வழங்குவதாக பல நாடுகள் அறி வித்துள்ளன.

அல்பேனியா, அவுஸ்திரேலியா, ஒஸ்ரியா, பெல்ஜியம், பல்கேரியா, கனடா, குரோஷியா, டென்மார்க், பிரான்ஸ், கிரீஸ், இத்தாலி, நெதர் லாந்து, நியூசிலாந்து, நோர்வே, இலங்கை, சுவீடன் உள்ளிட்ட பல நாடுகள் இந்தப் பிரேரணைக்கு அனுசரணை வழங்குவதாக அறிவித்துள்ளன. (ஐ)

# 6 மாதங்களில் கிளிநொச்சி மைதானம் சுகததாஸவைப் போன்று மாற்றப்படும்

## அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ உறுதி

கிளிநொச்சி, மார்ச் 18

6 மாதங்களுக்குள் சுகததாச உள்ளரங்கு போன்றுவெளிச்சூழ் டிய விளையாட்டரங்கொன்றை அமைத்து தருவதாக தொலைத் தொடர்புகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ வாக் குறுதியளித்தார்.

இங்குள்ள வீர வீராங்கனை கள் சாதனையாளர்களாக மாறு வதற்கு இந்த விளையாட்ட ரங்கு உதவியாக இருக்கும் என வும் அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் அமைக் கப்பட்ட மாகாணவிளையாட்டுக் கள் கட்டடத் தொகுதி மக்களின் பாவனைக்கு நேற்றுக் கையளிக் கப்பட்டது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அமைச்சர் மேலும் குறிப் பிடுகையில்–

6 மாதங்களுக்குள் சுகததாச உள்ளரங்கு போன்றுவெளிச்சூழ் டிய விளையாட்டரங்கொன்றை அமைத்துத் தருவோம்.

இங்குள்ள வீர வீராங்கனை கள் சாதனையாளர்களாக மாறு வதற்கு இந்த விளையாட்ட ரங்கு உதவியாக இருக்கும். இந்த மைதானத்துக்காக அடிக்கல் நாட்டியவர்கள் இன்று திறப்பு விழாவுக்காகப் படங்கள் எதையும் பொருத்தவில்லை.

இந்த மைதானத்திற்காக 2011 ஆம் ஆண்டு அடிக்கல்நாட்டப்பட் டதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் நீண்ட காலத்திற்கு பின்னரே இதை திறந்து வைக்க முடிகின்றது –என்றார். (ஐ)

# விசேட அதிரடிப்படையினருக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் 3 பெண்கள் உட்பட ஐந்து பேர் கைது!

யாழ்ப்பாணம் – அரியாலை பகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் மூன்று பெண்கள் உட்பட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அரியாலை கிழக்குப் பகுதி யில் தொடர்ச்சியாக மணல் கடத்தல் இடம்பெறுவதாக கிடைத்த தகவலையடுத்து அதனை முறியடிக்க சிறப்பு அதிரடிப்படை யினர் நேற்று முன்தினம் இரவு அங்கு சென்றிருந்தனர்.

சட்டவிரோத மணல் அகழ்வை தடுக்கும் நோக்கில் சென்ற விசேட அதிரடிப்படையினர் மீதே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

அங்கு மணல் கடத்தலில் ஈடுபட்டோரைத் தடுக்க முற்பட்ட சிறப்பு அதிரடிப்படையினருக்கும் மணல் வியாபாரிகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

இந்த மோதலில் காயமடைந்த சிறப்பு அதிரடிப் படையினர் மூவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளனர்.

இதனையடுத்து சம்பவம் இடத்திற்கு விரைந்த யாழ்ப்பா ணம் பொலிஸார், விசாரணை களை முன்னெடுத்திருந்தனர்.

அதற்கமைய சிறப்பு அதிரடிப் படையினரின் கடமைக்கு இடை யூறு விளைவித்தமை மற்றும் தாக்குதல் உடன் தொடர்பு பட்ட குற்றச்சாட்டில் மேற்படி ஐவ ரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓரிரு தொலைபேசி அழைப்புகள் தற்போதைபடிப்பமாணவர்களின் பெற்றோரிடமிருந்தும் வந்தவை.

ஒரு மாணவனின் தாயும், தந்தையும்சுவத்தொலைபேசியில் பேசினார்கள். கடைசியாக நான் அவர்களிடம் ஒரு விடயத்தைச் சொன்னேன்.

"உங்கள் மகன் இன்று புதுமுக மாணவனாகப் பல்கலைக்கழகம் நுழையும் போது அவன் எதிர் கொள்ளும் பகிடிவதைக் கொடூரம் உங்களை அச்சப்படுத்துகிறது; அங்கலாய்க்க வைக்கின்றது. அவன் குறித்து நீங்கள் கவலைப் படுகின்றமை சரியானதுதான். ஆனால் அடுத்த வருடத்தில் உங்களைப் போல இன்னும் பல நூறு பெற்றோர்கள் அந்தரிப்பார் கள், அல்லற்படுவார்கள். அதற்குக் காரணமான கொடூரவாதிகளில் உங்கள் மகனும் இடம்பெறாமல் இருப்பதைப் பார்த்துக்கொள்வது உங்கள் பொறுப்பு; கடமை. ஆனால்உங்களில்பலர் அதனை மறந்து விடுகின்றீர்கள். அடுத்த வருடம் இதே கரிசனையுடனும் பொறுப்புடனும் உங்களில் பலர் இருப்பார்களாயின் இந்தப் பிரச்சினைபெரிதும்புற்றுநோயாக நமது சமூகத்தின் மத்தியில் இவ்வளவு காலம் நீடித்திருக்காது. மாணவன் வரப்பிரகாஷ் கொலை யுடன் இப்பிரச்சினைக்கு முடிவு கட்டப்பட்டிருக்கும். அல்லது இயக்க காலத்துடன் இந்தக் கலாசாரம் முடிந்திருக்கும். ஆனால் அது புனர்ஜென்மம் எடுத்து இன்னமும் நமது சமூகத்தின் காட்டுமிராண்டிப் பக்கமாக தொடர்கின்றதே...!" – என்றேன் நான்.

"இல்லைத் தம்பி, நான் நிச் சயம் அடுத்த வரும் வருடங்களில் எனது மகன் றாகிங்கில் சம் பந்தப்படுகின்றானா என்பதை உறுதியாகப் பார்ப்பேன். றாகிங்கில் அவன் ஈடுபடுவானாயின் என் கையால் என் மகனுக்கு உணவ ளிக்கமாட்டேன்." – என்று சத்திய ஆவேசத்தோடு தொலைபேசியில் பேசினார் அந்தத் தாய்.

என் எழுத்துக்கும், தொலை பேசி உரையாடலுக்கும் கிடைத்த முத்தாய்ப்பு அங்கீகாரம் அந்தத் தாயின் உணர்வுப் பேச்சு என்று நினைத்துக் கொண்டேன்.

இலங்கையில் பல்வேறு பல் கலைக்கழகங்களிலும் அனுமதி பெற்று கல்வியைத் தொடரச் சென்ற 1987 மாணவர்கள் 'றாகிங்' கொடூரத்துக்கு முகம் கொடுக்க இயலாமல், பல்கலைக்கழக கல்வியையே விட்டு வெளியேறி விட்டனர் என்ற அதிர்ச்சித்தகவலை உயர்கல்வி அமைச்சர் என்ற முறையில் ரவூப் ஹக்கீம் நாடா ளுமன்றத்தில் வெளியிட்டிருக் கின்றார்.

கொழும்பில் ஓர் ஆங்கிலப் பத்திரிகையும், சிங்களப் பத்தி ரிகையும் அந்தக் கொடூரத்தின் தாக்கம் புரிந்தமையாலோ என் னவோ அதனை அப்படியே தமது முதலாம் பக்கத் தலைப்புச் செய்தி யாகப் பிரசுரித்திருந்தன.

இந்தச் செய்தியை நாடாளு மன்றத்தில் வெளியிட்ட அமைச் சர் ரவூப் ஹக்கீம் இலங்கை சட் டக் கல்லூரியில் எனக்கு சிரேஷ்ட மாணவர். இரண்டு வருடங்கள் சீனியர். எண்பதுகளின் ஆரம் பத்தில் அவர் இலங்கை சட்டக் கல்லூரி தமிழ்ச் சங்கத்தின் தலை வராகப் போட்டியிட்ட போது அச்சம யம் அவருக்கு ஆதரவு திரட்டி அவரது வெற்றிக்குப் பக்கபலமாக நின்ற பலருள் நானும் ஒருவன்.

அவரது மூத்த சகோதரர் டாக்டர் ஹாபிஸ். தம்பியாரின் ஊடகத் தொடர்பாளர் அவர்தான். வழமைபோல நேற்றிரவு ஒரு செய்தியாக என்னுடன் தொடர்பு கொண்டார். நான் அவரிடம் பின்வருமாறு கூறினேன்.

"டாக்டர் உங்கள் தம்பியாரின் – அமைச்சரின் – செய்தி நேற்று 'டெய்லி மிரரில்' முன்பக்கத் தலைப்பில்வந்துள்ளது. 'றாகிங்கை அரசு இனியும் பொறுத்துக் கொள்ளாது. கடுமையாகக் கையா ளும். இந்த விடயத்தில் அரசின் பொறுமை பூச்சியமாகத்தான் (Zero Tolerance) இருக்கும்' என்று அவர் கூறியிருக்கின்றார்" – என்றேன் நான்.

"நல்லதுதானே. அதைத்தானே நீங்களும் விரும்புகின்றீர்கள்...?" என்றார் அவர்.

"ஆம். அதுதான். இந்தச் செய்தியை வாசித்ததும் அமைச் சர்களுடன் பேச வேண்டும் என நினைத்தேன். ஆனால் முடிய வில்லை. என் சார்பில் அவரிடம் ஒரு செய்தி சொல்லிவிடுவீர்களா?" – என்றேன் நான்.

"கட்டாயம் சொல்வேன். என்ன செய்தி அது?" – என்று கேட்டார் அவர்.

"1981 – 1982 சட்டக் கல்லூரி அணியில் என்னை 'றாக்' பண் ணிய பிரதான குழுவின் தலைவர் அவர்தான். அதை அவருக்கு நினைப்பூட்டி விடுங்கள்!" – என் றேன் நான்.

டாக்டர் ஹாபிஸ் விழுந்து விழுந்து சிரித்தார்.

இப்போது வாசகர்களாகிய நீங்கள் என்னிடம் கேட்க முயலும் கேள்வி என்ன என்பது எனக்குப் புரிகிறது. நான் 'சீனியர்' ஆனதும் கனிஷ்ட மாணவர்களை 'றாக்' பண்ணவில்லையா என்பதுதான் அக்கேள்வி.

இல்லவே இல்லை. அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று–நான் இயல்பாகவே அந்தக் காட்டுமிராண்டித்தனத்தை விரும்ப வில்லை. அடுத்தது – சட்டக் கல் லூரியில் என் போன்று – நான் பத்திரிகையில் பணியாற்றிக் கொண்டு படித்தமை போல – வேறு சிலரும் வேலை செய்து கொண்டு படித்தனர். எங்களுக்கு அங்கு ஒரு பொதுவான பெயருண்டு. 'Visiting Students' என்பது அது. ஆடிக்கொரு தடவை, ஆவணிக் கொரு தடவை என்று விரிவுரை களுக்கு வரும் எங்களை வேறு எப்படித் தான் அழைப்பார்கள்? 'Visiting Students' ஆன எம் போன்றோருக்கு வகுப்புக்குச் செல்லவே நேரமில்லை, இதற் குள் றாகிங்குக்கு எங்கு நேரம்?

இப்படி ஒழுங்காக வகுப்புக்கு வராத எங்களை அடுத்தடுத்த வருடங்களிலும் புதிய முகம் எனறு கருதி, புதுவகுப்பு மாண வர்கள் என்று மீண்டும் 'றாகிங்' செய்யாவிட்டால் சரி எனக் கரு திக் கொள்வோம்.

1983 கலவரத்துடன் அந்தப் படிப்பை எல்லாம் தொலைத்தாகி விட்டது. இறுதியாண்டு சட்டத் தரணிக் கல்விக்கும் கொழும்புப் பத்திரிகை வேலைக்கும் 1983 ஆடிக் கலவரத்துடன் முழுக்குப் போட்டுவிட்டு யாழ்ப்பாணம் மீண்டேன். இப்போது சட்டக் கல்லூரிப் படிப்பு வெறும் பழைய நினைவுதான். திரும்பப் போய் இறுதியை முடிக்கும் எண்ணம் ஏதும் இல்லை. 38 ஆண்டு களுக்கு முன்னர் தொடங்கிய அந்த மூன்று வருடக் கல்வியின் இறுதியாண்டுத் தேர்வுக்கு இப் போது மீண்டும் நான் போய்த் தோற்றி தப்பித் தவறி சித்தி எய்துவேனாயின் எனக்கு 'Attorney - at - law' என்று பட்டம் தரமாட்டார்கள். 'Attorney - at - last' என்றுதான் தருவார்கள். மூன்று ஆண்டுக் கல்வியை 38 ஆண்டுகளுக்குப் பின்னர் பூர்த்தி செய்தால் அதுதான் சரியான பட்டமாக இருக்கும்...!

மின்னல் -

# இந்திய எல்லைக்குள் இலங்கைக் கடற்படையினர் எந்தச் சந்தர்ப்பத்திலும் அத்துமீறி நுழைவது கிடையாது

## உறுதிபடக் கூறுகின்றார் தளபதி ரியர் அட்மிரல் பியால் டி சில்வா

இலங்கைக் கடற்படை ஒரு போதும் இந்தியக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்தது இல்லை என்றும், இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் நுழையும் சந்தர்ப்பங்களில் மாத்திரமே கைது செய்யப்படுகின்றனர் என்றும் கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் பியால் டி சில்வா தெரிவித்தார்.

கச்சதீவு புனித அந்தோனியார் திருவிழாவின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துவெளியிடுகையில் அவர் இதனைக் கூறினார்.



அத்துடன், போதைப்பொருள் கடத்தல்காரர்களைத் துரத்திச் செல்லும் சந்தர்ப்பங்களில் எல்லை தாண்ட வேண்டிய அவசியம் இருந்தால் மாத்திரமே இந்திய உயர் அதிகாரிகளிடம் அனுமதி பெற்று இந்திய எல்லைக்குள் சென்று படகுகளை இலங்கைக்கடற்படையினர் கைப்பற்றுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போதைபொருள் கடத்தலைத் தடுப்பதற்காக இலங்கைக் கடற்படை பல்வேறு சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அதன் பயனாக கடந்த வருடம் சுமார் 2,100 கிலோ கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த வருடத்தின் கடந்த 9 வாரங்களில் மாத்திரம் 700 கிலோ கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் போதைப் பொருள் அச்சுறுத்தல் காணப்படுகின்றது. எனவே இலங்கைக் கடற்படை தொடர்ச்சியாக போதை பொருள் கடத்தலை தடுக்கவும் கடத்தல்காரர்களை பிடிக்கவும் ரோந்துக் கப்பல்கள கண்காணிப்பில் ஈடுபடுத்திகளை வருகிறது.

போதைப் பொருள் கடத்தலை முறியடிக்கும் நடவடிக்கையில் இந்தியக் கடற்படையினர் எமக்கு உதவி செய்துவருகின்றனர். இந்திய கடற்பரப்பில் இருந்து வரும் படகுகளில்போதைப் பொருள்கள் காணப்படும்போது அதுதொடர்பான மேலதிக நடவடிக்கைகளுக்கு இந்திய கடற்படையின் உதவிகள் பெற்றுக்கொள்ளப்படும். அத்துடன், இலங்கைக் கடற்பகுதியில் இருந்து இந்தியக் கடல் பரப்புக்குள் கடத்தல்காரர்கள் நுழைந்தால் உடனடியாக இந்திய கடற்படைக்கு தகவல் அளித்து அவர்களை பிடிக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம்.

இதேவேளை, இருநாட்டு மீனவர்களும் பாதுகாப்பாக மீன் பிடியில் ஈடுபடுவதற்கு ஏதுவான வகையில், தத்தமது கடற்பகுதியில இலங்கை – இந்தியக் கடற்படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் பியால் டி சில்வா சுட்டிக்காட்டினார்.

## கிழக்குப் பல்கலை மருத்துவ பீடத்தில் 15 மாணவருக்கு 2 வார வகுப்புத் தடை!

### மோசமான பகிடிவதையில் ஈடுபட்டனராம்


கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் கற்கும் 15 மாணவர்களுக்கு, இந்த வாரம் தொடக்கம் அடுத்து வரும் இரண்டு வாரங்களுக்கு வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளதுஎன அஃதுப்பல்கலைக் கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ள மாணவர்கள் அனைவரும் மருத்துவ பீடத்தின் கனிஷ்ட மாணவர்களை மிக மோசமாகப் பகிடிவதைக்கு உட்படுத்தியமை விசாரணைகளின்போது உறுதிப் படுத்தப்பட்டதையடுத்து, இந்த வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## பட்ஜெட்டைத் தோற்கடிக்கும் வாய்ப்பு சு.கவினரால் இழப்பு

மாத்தளை, மார்ச்18

தற்போதைய அரசின் மக்களுக்கு விரோதமான வரவு – செலவுத் திட்டத்தைத் தோற்கடிப்பதற்குக் கிடைத்த வாய்ப்பு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் இழக்கப்பட்டது என எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



மஹிந்தர் பெரும் விசனம்

தனது ஆட்சியின்போது எடுத்த கடன்களுக்குச் சரிசமனான அபிவிருத்திகளைச் செய்தார்கள்எனவும், இருப்பினும்தற்போதைய அரசின் கடன்களுக்கு ஏற்ப அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றமையைக் காண முடியவில்லை எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

மாத்தளைப் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் அரசுக்கு எதிரான நிலைப்பாட்டை சு.கவினர் எடுக்காமல் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கிக் கொண்டனர் என்பது தெரிந்ததே.

## பொலிஸ் அதிகாரிகள் 26 பேருக்கு இடமாற்ற உத்தரவு

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் இருவர் உட்பட 26 பொலிஸ் உயரதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சேவை நிமித்தம் பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியின் அடிப்படையில் இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய, பொலிஸ் அத்தியட்சகர்கள் ஐவர், உதவி பொலிஸ் அத்தியட்சர்கள் 14 பேர், சிரேஷ்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் மூவர், இன்ஸ்பெக்டர்கள் இருவர் என 26 உயரதிகாரிகளுக்கே இந்த மாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## கென்ய விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று கொழும்பு திரும்பினார் ஜனாதிபதி

நான்கு நாள்கள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு கென்யாவுக்குச் சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நேற்றுக் காலை நாடுதிரும்பினார்.

காலை 7.55 மணியளவில் ஜனாதிபதி உள்ளிட்ட தூதுக்குழுவினர் நாடு திரும்பியுள்ளனர் எனக் கட்டுநாயக்க விமான நிலையத்தின் கடமை நேர அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றாடல் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, 4 நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு கென்யாவிற்குச் சென்றிருந்தனர்.

கென்ய ஜனாதிபதி உஹுரு கென்யாட்டாவின் விசேட அழைப்பின் பேரிலேயே இந்தச் சுற்றாடல் மாநாட்டில் கலந்துகொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அங்கு விசேட உரையொன்றையும் நிகழ்த்தியிருந்தார்.

இந்த விஜயத்தின்போது, ஜனாதிபதி மைத்திரிபால, கென்யா ஜனாதிபதி உஹுரு கென்யாட்டாவை சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

அத்துடன், ஜனாதிபதி, கென்ய வாழ் இலங்கை மக்களை நைரோபி நகரில் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது, பொருளாதார ரீதியாக அபிவிருந்தியடைந்த, ஒழுக்கமிக்க சமுதாயத்தினர் வாழும் நாடாக இலங்கையை கட்டமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளைத்தான் மேற்கொண்டு வருகிறார் என ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

அத்துடன், இலங்கையில் சமாதானம் நிலைநாட்டப்பட்டு 2019ஆம் ஆண்டுடன் 10 வருடங்கள் பூர்த்தியாவதாகவும், சமாதானத்தின் பத் தாண்டுக் கொண்டாட்டம் எதிர் வரும் மே மாதம் மிக விமரிசையாக நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இப்போது இப்படிக் கூறுகின்றார் எஸ்.பி. திஸாநாயக்கா

## இறுதி வாக்கெடுப்பில் பட்ஜெட்டுக்கு எதிராகவே வாக்களிக்குமாம் சு.க.!

### மஹிந்தரைப் பிரதமராக்கியதும் மட வேலையாம்

வரவு - செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பில் அதற்கு எதிராகவே தமதுகட்சிவாக்களிக்கவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.



கண்டியில்நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த அரசியல் குழப்ப நிலையின்போது மஹிந்தவைப்பிரதமராக்கி, மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் இல்லாமல் ஆட்சி அமைக்க முற்பட்டமை மூடத்தனமானதாகும்.

அந்தத் தீர்மானத்தில் சந்தேகம் காணப்பட்டது. என்றாலும் ஆட்சி கலைக்கப்பட்டது. அது தவறு என உயர்நீதிமன்றம் அறிவித்தது. இதனால் எமது கட்சியில் சிறிய பின்னடைவு ஏற்பட்டமை உண்மையாகும்.

இந்த வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களிக்கவே நாம் தீர்மானித்திருந்தோம். இறுதியில் வரவு - செலவுத் திட்ட வாக்களிப்பில்கலந்து கொள்ளாது விலகியிருக்கத் தீர்மானித்தோம். எனினும், அதிலும் குறைபாடுகள் உள்ளன.

ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதி வாக்கெடுப்பில் ரணில் அரசின் வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராகவேநாம் வாக்களிப்போம் - என்றார்.

## கிழக்கு பல்கலைக்கழக மாணவனைத் தாக்கிய சக மாணவர்கள் இருவருக்கு விளக்கமறியல்

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் வியாபார முகாமைத்துவ பிரிவு மாணவனை தாக்கிய சக மாணவர்கள் இருவரையும் எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக் கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் கட்டளையிட்டுள்ளார்.

திருகோணமலை நீதிமன்ற பதில் நீதவான் ஏ. எம். அப்துல் முஹீத் முன்னிலையில் அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் இருவரும் முன்னிலைப்படுத்தப் பட்டபோதே இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மாணவர்கள் அதே பல்கலைக்கழகத்தில் இரண்டாம் வருடத்தில் கல்வி பயிலும் 21 வயதுடைய மட்டக்களப்பு மாவட்டத்துக்கு உட்பட்ட களுவாஞ்சி குடி மற்றும் வெல்லாவெளி பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவருகின்றது.

கடந்த 12 ஆம் திகதி பல்கலைக் கழக வளாகத்திலுள்ள சிற்றுண்டிசாலையில் வைத்து மூதூர் – நெய்தல் நகர் பகுதியைச் 21 வயதுடைய முகம்மட் அப்ராஸ் என்ற சக மாணவனை இவர்கள் தாக்கினர் என நிலாவெளி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அம்முறைப்பாட்டையடுத்து இம்மாணவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர் எனவும் நிலாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவன் தொடர்ந்தும் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனவும் பொலிஸார் நீதிவான் முன்னிலையில் குறிப்பிட்டனர்.

இதனையடுத்து இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் கட்டளையிட்டார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - https://kalaikathir.online

## கோட்டபாயவா? ரணிலா? மைத்திரியின் தெரிவு யார்?

பதவிக்கான - அதிகாரத்துக்கான - போட்டி என்றானதும் தென்னிலங்கைக் கட்சிகள் தம் கைவரிசையை - சுயரூபத்தை - காட்டத் தொடங்கி விட்டன.

கடந்த தடவை ஜனாதிபதித் தேர்தலின்போது சர்வாதிகார ஆட்சியைத் தொடர்ந்து கொண்டிருந்த மஹிந்த ராஜபக்ஷவின் பிடியிலிருந்து அதிகாரத்தை மீட்பதற்காக அப்போதைய எதிரணிகள் யாவும் கூட்டுச் சேர்ந்து நின்றன.

மஹிந்த தரப்பிலிருந்து காத்திரமான ஒருவரைப் பிரித்து, இழுத்து எடுப்பதன் மூலம் மஹிந்தரைப் பலவீனப்படுத்தித் தோற்கடிக்கலாம் என அவை வியூகம் வகுத்தன.

அதனால், அந்த அதிர்ஷ்டம் மைத்திரிபால சிறிசேனவுக்குக் கிட்டியது. கடைசி நாள் வரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அருகில் இருந்து அதிகாரத்திலும், பதவியிலும், செல்வாக்கிலும் பங்கு போட்டு ருசித்து விட்டு, இறுதி நேரத்தில் அவரின் முதுகில் குத்தி விட்டு, குத்துக்கரணம் அடித்து வெளியேறியமைக்குப் பரிசாக கூட்டு எதிரணியின் பொது வேட்பாளர் வாய்ப்பும் கூட்டு எதிரணியின் முழு ஆதரவும் மைத்திரிபால சிறிசேனவுக்குக் கிடைத்தன. அதனால், ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியும், ஜனாதிபதிப் பதவியும் கூட, அவற்றை நினைத்துப் பார்க்க முடியாத நிலையில் இருந்த அவருக்குச் சாத்தியமாகின.

மஹிந்த ராஜபக்ஷ பக்கத்திலிருந்து நன்றி மறந்து, அன்றைய கூட்டு எதிரணிப் பக்கம் தாவிய மைத்திரிபால சிறிசேனவுக்கு, பின்னர் தன்னை ஜனாதிபதியாக்கிய ஐக்கிய தேசிய முன்னணி உட்பட முன்னைய எதிரணியின் காலை வாரிவிட்டு, மீண்டும் குத்துக்கரணம் அடித்து, அணி மாறுவது அப்படி ஒன்றும் கஷ்டமான விடயமாக இருக்கவில்லை.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மீளவும் தாம் ஜனாதிபதியாகி விட வேண்டும் என்ற நப்பாசை காரணமாக கடந்த ஒக்ரோபர் 26ஆம் திகதி தமது அரசியல் சதி நாடகத்தை அவர் அரங்கேற்றத் தொடங்கினார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தாம் தோற்றிருந்தால் தமது கதையை ஆறடி மண்ணுக்குள் முடித்திருப்பார்கள் என்று கூறிய தரப்போடே அணி சேர்ந்தார் அவர்.

ஆனால், அதிகாரம் - பதவி - என்று வந்து விட்டால், விட்டுத் தருவதற்கு அவை ஒன்றும் வெறும் சுக்கும் மிளகும் அல்ல என்ற பாடத்தை இப்போது மஹிந்த தரப்பு மைத்திரிக்குப் புகட்டத் தொடங்கியிருக்கின்றது.

தமது சுதந்திரக் கட்சியில் இருந்தே ஆள்களை - தலைவர்களை - பிரித்தெடுத்து, புதிய கட்சியான பொதுஜன பெரமுனையைப் பலப்படுத்திக் கொண்ட மஹிந்தர், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தாங்கள் இரண்டு கட்சிகளினதும் பொது வேட்பாளராகத் தம்மை நிறுத்துவார் என்று கனவு கண்ட - நப்பாசைப்பட்ட - மைத்திரிபால சிறிசேனவின் நம்பிக்கையில் ஆழ அடி விழுந்து விட்டது.

தமது சகோதரரும், பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளருமான கோட்டாபய ராஜபக்ஷவே தங்கள் தரப்பின் ஜனாதிபதி வேட்பாளர் என்பதை மஹிந்த ராஜபக்ஷ அணியினர் - பொதுஜன பெரமுனவினர் - பகிரங்கமாக அறிவித்தமையை அடுத்து ஜனாதி மைத்திரிபால சிறிசேனவின் நம்பிக்கையில் மண் விழுந்துவிட்டது என்பது உறுதியானது.

கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக - உலக்கை தேய்ந்து உளிப்பிடியான நிலைமை போல - ஒன்றரை டசின் எம்.பிக்களை மட்டுமே இப்போது நாடாளுமன்றத்தில் வைத்திருக்கும் சுதந்திரக் கட்சியின் தலைவரான மைத்திரிபால சிறிசேனவுக்கு, பொதுஜன பெரமுனவின் ஆதரவு இல்லாவிட்டால், வெற்றி வாய்ப்புக் குறித்துச் சிந்திப்பதற்கே இடமில்லை என்பதுதான் யதார்த்தப் புறநிலைமையாகும்.

அத்தகைய சூழ்நிலையில், அவர் ஒன்றை மட்டும்தான் செய்யலாம். அது - தனது சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து கூட்டணி அமைத்துத் தன்னை இந்த ஜனாதிபதித் தேர்தலில் கூட்டணி வேட்பாளராக நிறுத்தாமைக்குப் பழி வாங்கும் நோக்கில், சுதந்திரக்கட்சி வேட்பாளராகத் தானே களத்தில் நின்று வாக்குகளைப் பிரிப்பதன் மூலம் பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக நிற்கக் கூடிய - இன்றைய நிலையில் பெரும்பாலும் கோட்டாபய ராஜபக்ஷவின் - வெற்றி வாய்ப்பைச் சிதறடிக்கப் பண்ணலாம்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷதான் என்று பல தரப்பிலும் கூறப்பட்ட பின்னரும், சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவே என அவரது கட்சியின் பொதுச் செயலாளரான தயாசிறி ஜயசேகரா பகிரங்கமாக அறிவிக்கின்றமையைப் பார்க்கும்போது -

தனக்குப் போட்டியாக நிறுத்தப்படப் போகும் கோட்டாபய ராஜபக்ஷவின் காலை வாரி விடுவதற்கு மைத்திரிபால சிறிசேன தயாராகிறார் என்றே தோன்றுகிறது.

'தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனம் பிழைத்தால் போதும்!' - என்ற பாணியில் செயற்படுவதுதானே அரசியல்?

எது, எப்படியோ, சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் - பொதுஜன பெரமுனையும் தங்களுக்குள் முட்டிமோதி, ஒருவரின் வெற்றி வாய்ப்பை மற்றவர் இழுத்துப் பிடித்து விழுத்திக் குழப்பம் பண்ணினால், இந்த இரண்டு தரப்புகளுக்கும் நேரெதிராக நிற்கும் ஐக்கிய தேசிய முன்னணிக்குத்தான் வெற்றி வாய்ப்பு அதிகம்.

மஹிந்த, கோட்டா தரப்பினர் போல நேரடியாக அரசியலில் பழி தீர்ப்பவரல்லர் ஐ.தே.கவின் ரணில் விக்கிரமசிங்க என்று மைத்திரி கருதுவாரானால் -

அடுத்த ஜனாதிபதியாகும் வாய்ப்பு தமக்கும் இல்லை என்றால், அந்த இடத்துக்கு கோட்டாவிலும் பார்க்க ரணில் வருவதையே அவர் அதிகம் விரும்புவார் என எதிர்பார்க்கலாம்.

கோட்டாவுக்குப் போட்டியாக ஜனாதிபதித் தேர்தல் களத்தில் மீண்டும் மைத்திரிபால குதிப்பார் எனில் அவர் அப்பதவிக்கு கோட்டாவை விட ரணிலையே விரும்புகின்றார் என்பதே அர்த்தம், உட்பொருள்.

# 'மறத்தமிழர்' - என்ற பெயரில் புதிய கட்சி நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் உதயம்






வவுணதீவு,மார்ச்18

மட்டக்களப்பு மாவட்டத்தில் மறத் தமிழர் எனும் புதிய கட்சி நேற்று ஞாயிற்றுக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

கட்சியின் ஆலோசகரான வைத்தியர் நாகமணி பத்மநாதன் தேசியக் கொடியேற்ற, தலைமை ஒருங்கிணைப்பாளர் வேலப்பு அன்புமணி கட்சிக் கொடியை ஏற்றியமையைத் தொடர்ந்து கட்சி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கட்சியின் அங்குரார்ப்பண நிகழ்வை தொடர்ந்து மண்முனை மேற்கு - வவுணதீவு நாவற்காடு பிரதேசத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பங்கேற்ற மறத் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் வேலப்பு அன்புமணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சரியான பாதையில் பயணிக்கவில்லையென தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சரியான பாதையில் இல்லை. அவர்கள் தற்போது அவர்களின் கொள்கையில் இருந்து மாறியே செயற்படுகின்றனர். அதற்காக உரிமையை விட அபிவிருத்தி முக்கியம் என்பது எமது எண்ணம் அல்ல. தற்போதைக்கு மக்களை வறுமைப்பிடியில் இருந்து உயர்த்த வேண்டும் என்று மறத் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் வேலப்பு அன்புமணி தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

இதுவரை காலமும் எமது மக்கள் வாக்களித்துத் தேர்வு செய்த அரசியல் பிரதிநிதிகள் எமது மக்களின் நிலைமைகளைச் சரியாகப் புரிந்து கொள்ளாதமை கவலைக்குரிய விடயம். எமது இந்தப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் சகல வளங்களும் இங்கே கொட்டிக் கிடக்கின்றன.

இங்கிருக்கின்ற வளங்களை வைத்துக் கொண்டு வளம் சார்ந்த தொழிற்சாலைகளை அமைத்து எங்களுடைய இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்க முடியும். அப்படி இருக்கும் பட்சத்தில் எமது அரசியல் தலைமைகள் வீதிகள், விளக்குகள் போடுவதைக் கூடச் சரியாகச் செய்யாமல் அவர்களது சுயநலம் சார்ந்தே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இன்று எமது நாட்டில் பரவலாகப் பொது அமைப்புக்களின் உருவாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. எமது மக்களால் வாக்களித்து தெரிவு செய்யப்பட்ட அரசியல் பிரதிநிதிகள் மக்களுக்கானவர்களாக, மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியவர்களாக இருந்திருந்தால் இவ்வாறான பொது அமைப்புக்கள் தேவையற்றவையாக இருந்திருக்கும்.

இன்றைய காலச் சூழலில் எங்களுடைய இளைஞர்கள் வாழும் வயதில் தங்கள் வாழ்க்கையைத் தொலைத்து மத்திய கிழக்கு நாடுகளில் குறைந்த சம்பளங்களுக்கு உழைத்துக் கொண்டிருக்கின்றார்கள். தேர்தல் நேரங்களில் மட்டும் மக்களில் இருக்கும் அபிலாசைகளைக் காட்டுவதும், மக்கள் மீது அன்பு காட்டுவதுமான ஒரு நாடகப் போக்கை எமது மக்கள் பிரதிநிதிகள் தொடர்ச்சியாக மேற்கொள்கின்றமை இளைஞர்களாகிய எமக்கு அதிருப்தியையும் மனவேதனையும் ஏற்படுத்தி இன்று இந்த நிலைமைக்குக் கொண்டு வந்துள்ளது.

எமது மக்களுக்காக எமது வளங்களை வைத்துக் கொண்டு வளம் சார்ந்த தொழிற்சாலைகள், வேலைவாய்ப்புகள், அபிவிருத்திகள் என மறத்தமிழர் கட்சியினராகிய எமது அரசியல் தொடர்ந்து நீளும். எமது மக்கள் நிச்சயம் ஆதரிப்பார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எமது மக்களை சரியாகப் பயன்படுத்தி எமது வளங்களை வைத்துக் கொண்டு ஒரு முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்லவில்லை. எமது நாட்டின் முதுகெலும்பாகக் காணப்படும் இந்த விவசாயத் தொழில் ஒன்றே போதும் - எமது மக்களை வளம்சார்ந்த மக்களாக மாற்றுவதற்கு. அதற்கான எவ்வித முயற்சிகளையும் அவர்கள் மேற்கொள்ளாமல் மழுங்கடிப்புச் செய்ய முற்படுவது எமக்கு வேதனையாக இருக்கின்றது.

இருப்பினும், உரிமை சார்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்ளும் அனைத்து விடயங்களுக்கும் வெளியில் இருந்து எமது ஆதரவினை வழங்குவோம்.

இத்தனை காலமும் எமது மக்கள் ஒட்டுமொத்த வாக்குகளைத் தமிழத் தேசியக் கூட்டமைப்பு வழங்கி ஓர் எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவியையும் வழங்கினர்.

அந்தப் பதவியை நீர்த்துப் போகச் செய்ததைத் தவிர தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செய்த சாதனை என்னவென்றே தெரியவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வைத்துக் கொண்டே எதனையும் சாதிக்க முடியாதவர்கள் இனிவரும் தேர்தல்களில் வாக்குகள் சிதைக்கப்படாமல் அவர்களுக்கே ஒட்டுமொத்த வாக்குகளை மீண்டும் வழங்குவதன் மூலம் அவர்கள் மக்களுக்காகச் செயற்படுவார்கள் என்ற நம்பிக்கையை அவர்களிடம் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்.

இதற்கு முன்னர் இருந்த தலைமைகள் சரியான தேர்வுகளை மேற்கொள்ளாமல் இந்த இடத்திற்கு எங்களைக் கொண்டு விட்டமையினால் நாளைய தலைமுறைகள் எம்மைப் பார்த்துத் தூற்றக் கூடாது என்ற நோக்கத்தைக் கொண்டே நாங்கள் செயற்படுகின்றோம். எமது எதிர்காலச் சந்ததிக்காகப் பாடுபட்டு உழைக்க வேண்டும். எமது கலை கலாசாரப் பண்பாடு அத்தனையும் காக்கப்பட வேண்டும்.

மறத்தமிழர் கட்சி ஒருபோதும் எவருடனும் இணைந்து செயற்படமாட்டாது. தேர்தல்களிலும் தனித்தே போட்டியிடும். அடுத்து வரும் எந்தத் தேர்தலாக இருந்தாலும் எமது கட்சி போட்டியிடும். இதனைப் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. - என்றார்

# ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்கினால் பௌத்தத்துக்கும் நாட்டுக்கும் ஆபத்து!

## வண. மெதகம தம்மானந்த தேரர் கருத்து

மாகாண சபைகளைக் கட்டுப்படுத்துவதற்கு ஜனாதிபதிக்கு மட்டுமே முடியும் என அஸ்கிரிய பீட பிரதம செயலாளர் வண. மெதகம தம்மானந்த தேரர் தெரிவித்தார்.

மாகாண சபை இன்றி இந்த நாட்டை நிருவகிக்க முடியும் என்பதை நாம் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். கடந்த பல மாதங்களாக மாகாண சபைகள் செயற்படுவதில்லை. இருந்தாலும், நாட்டின் சகல நடவடிக்கைகளும் எதுவித தடையுமின்றி முன்னெடுக்கப்படுகின்றன.

இதனால், மாகாண சபையை நீக்கி விட்டே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை நீக்குவது குறித்துக் கவனம் செலுத்த வேண்டும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை மட்டும் நீக்கப்படுமானால், அது பௌத்த மதத்துக்கும் நாட்டுக்கும் ஆபத்தானது. - எனவும் தேரர் மேலும் கூறினார்.

### நாளை

19.03.2019
செவ்வாய்க்கிழமை
நட்சத்திரம்: மகம் பி.ப.05.25 வரை.
திதி : திரியோதசி பி.ப. 12.17 வரை
இராகுகாலம் : 03.18 – 04.48
சுப நேரம் : 10.48 – 12.18

# தமிழ் மக்கள் கூட்டணியின் அரசியல் செயற்பாடுகள் கிழக்கு மாகாணத்தில் நேற்று முழு வீச்சில் ஆரம்பம்

## நீதியரசர் விக்னேஸ்வரன் ஒரு வாரம் அங்கு தங்கி நின்று மக்களைச் சந்திப்பார்

பட்டிருப்பு,மார்ச்18

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி தனது செயற்பாடுகளைக் கிழக்கு மாகாணத்திலும் நேற்று ஆரம்பித்தது.

வடக்கைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் கூட்டணி கால் பதித்துள்ளது.

அவ்வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் – குறிப்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் – கோட்டை என வர்ணிக்கப்படும் பட்டிருப்புத் தொகுதியிலே முதலாவது மக்கள் சந்திப்பை நேற்று நடந்துள்ளது.

இந்தச் சந்திப்பில் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன் மற்றும் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நீதியரசர் விக்னேஸ்வரன் தலைமையிலான சந்திப்புக்கள் கிழக்கு மாகாணத்தில் அடுத்த ஒரு வார காலத்துக்குத் தொடரும் எனத் தமிழ் மக்கள் கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை செயலாளராக கொண்ட தமிழ் மக்கள் கூட்டணி வடகிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் ஏற்கனவே மக்கள் சந்திப்புக்களை நடத்திவருகின்றமை தெரிந்ததே.



## கேரளக் கஞ்சாவுடன் இருவர் பொத்துவில் பகுதியில் கைது



பொத்துவில்,மார்ச் 18

கடற்படையினரினால் வழங்கிய தகவலின் அடிப்படையில், தென் கிழக்குக் கடற்படைக் கட்டளைப் பிரிவின் வீரர்கள் மற்றும் அருகம்பை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், போதை மருந்து தடுப்பு பிரிவின் உத்தியோகத்தர்கள் இணைந்து நேற்று முன்தினம் பொத்துவில், கொட்டுயாலே பகுதியில் வைத்து 2.12 கிலோ கிராம் கேரள கஞ்சாவுடன் இருவரைக் கைதுசெய்துள்ளனர். இந்தக் கஞ்சாப் பொதி வீட்டில் விற்பனைக்குத் தயாராக இருக்கும்போது கண்டுபிடிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட நபர்கள் பொத்துவில் பகுதிகளில் வசிக்கின்ற 39 மற்றும் 61 வயதானவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாகப் பொத்துவில் பொலிஸால் மேல் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த ஆண்டுக்குள் மட்டும் கடற்படை நடவடிக்கைகள் மூலம் 680 கிலோ கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கடும் வறட்சியின் பிடியில் நாடு நிலைமை மோசமாகும் ஆபத்து

நாட்டில் நிலவும் கடும் வறட்சியால் லட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் கடும் சிரமத்தை எதிர்கொண்டுவருகின்றனர். கடும் வெயிலும் வெப்பமும் இன்னும் சில காலம் நீடிக்கும் என எதிர்வு கூறப்படுவதால் நிலைமை இன்னும் மோசமடையலாம் எனக் கருதப்படுகிறது.

நாட்டில் உள்ள ஆறுகள் மற்றும் குளங்களும் வற்றி நீர் மட்டமும் குறைவடைந்து வருகின்றது. தாவரங்கள் செத்துமடிவதாலும், விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதாலும் விவசாயிகள் செய்வதறியாது தவிக்கின்றனர்.

குறிப்பாக மகாவலி கங்கையின் நீர் மட்டம் 42 வீதமாக குறைவடைந்துள்ளது. காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர்



மட்டமும் 40 அடி வரை குறைவடைந்துள்ளது.

கடும் வெப்பத்துடனான காலநிலை இன்னும் சில நாள்களுக்கு நீடிக்கும் என்பதால் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவும் என இடர்முகாமைத்துவ நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவும் பட்சத்தில், அதனைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அந்த நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.




## மன்னிப்பே விடுதலைக்கு வழியாகும்..!

மானிட வாழ்வு மகிழ்ச்சியுள்ளதாக அமைய வேண்டுமானால் மற்றவர்களை நேசிக்கின்ற போதே அது சாத்தியமாகும். அன்றேல் போலியான, வெளியே பார்ப்பதற்கு மகிழ்ச்சி போல காட்சியளிக்குமே ஒழிய, உண்மையான உள்ளத்து மகிழ்ச்சியாக இருக்காது. தங்கமுலாம் பூசிய தகடுகளே. இவர்களின் பேச்சு இனிமையானது போலவே காணப்படும். சொற்களை அடுக்கி செபிப்பது போல பாசாங்கு செய்யும் இவர்கள், வெளிவேடக்காரர் என்று இயேசு குறிப்பிடுகின்றார். நாம் கேட்குமுன்பே, நம் தேவைகளை அறிந்தவராக இறைவன் இருக்கின்றார்.


இயேசுவின் வார்த்தைக்கு எதிராக நாம் செயற்படுகின்ற பொழுது எம்முடைய செபங்கள் கேட்கப்படுவதில்லை. கிறிஸ்தவ வாழ்வின் மகிழ்ச்சி மன்னிப்பிலே தங்கியுள்ளது. எம்மைத் தீமைகள் சூழ்ந்தாலும் நாம் அவற்றில் நின்று காக்கப்படுவோம்.

நான் அளிப்பது உலகம் தரும் சமாதானம் போன்றது அல்ல நிறைவான மகிழ்வைத் தரும் சமாதானத்திலேயே என்று இயேசு கூறுவது இந்த மன்னிப்பதன் ஊடாக நாம் பெற்றுக் கொள்வதையே குறிக்கின்றது. உங்களை இல்லாது பொல்லாதது சொல்லும் போது அவர்களை எதிர்த்தெழாமல் அவர்களின் செயல்களுக்காக இறைவனிடம் மன்றாடுங்கள். உங்களைச் சூழ்ந்த தீமைகள் விரைவாக விலகிப் போகும். மன்னிப்பவன் மறு வாழ்வைப் பெறுவான் தண்டிப்பவன் தண்டனைக்கு உள்ளாவான். மன்னிப்பு என்பது இயலாதவனின் பண்பு என்று இயேசுவையே இழித்துரைத்தது உலகு. ஆனால் இயேசு இறுதி மூச்சு வரை, தம்மை பகைவனாகக் கருதியவர்களை மன்னித்ததன் மூலம் மூன்றாம் நாள் உயிர் பெற்றெழுந்து உலகிற்கே விடுதலை அளித்தார்.

மன்னிப்பு என்பது மாற்றங்களை உருவாக்கும் மறுவாழ்வைக் கட்டி எழுப்பும். மன்னிக்காது விட்டால் அழிவுகளும் அவலங்களும் நிறைந்த உலகே எமதாகும்.

- அன்ரனிபீற்றர்
(ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்)

## மின் தடை



யாழ்ப்பாணம், மார்ச் 18

உயர் அழுத்த மற்றும்தாழ்அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை -

**வவுனியா பிரதேசத்தில்–**

பட்டாணிச்சூர் கிராமத்தில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

(இ

# பகிடிவதையால் பல்கலைக் கல்வியை 1987 மாணவர்கள் கைவிட்டனராம்!

## உயர்கல்வி அமைச்சர் ஹக்கீம் அதிர்ச்சித் தகவல்

பல்கலைக்கழக அனுமதி பெற்று, பல்கலைக்கழகத்துக்குள் கல்விக்காக நுழைந்த பின்னர் பகிடிவதை காரணமாக மொத்தம் 1987 பல்கலை மாணவர்கள் அவர்களது உயர் கல்வி நடவடிக்கைகளை கைவிட்டுள்ளனர் என உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.



பகிடிவதை தொடர்பில் அரசு இனிமேலும் பொறுமைக் கொள்கையை கடைப் பிடிக்கப் போவதில்லை என்ற தீர்மானத்தில் இருக்கின்ற போதிலும், பகிடிவதை இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது என நாடாளுமன்றத்தில் அவர் கூறினார்.

இத்தகைய பகிடிவதைச் செயற்பாடுகள் பல்கலைக்கழகங்களில் நடைபெறாமல் இருக்கும்வகையில் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அனைத்து அரச பல்கலைக்கழகங்களின் வேந்தர்கள், உபவேந்தர்களுக்கு பகிடிவதையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கான அதிகாரம் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பாலியல், பாலின அடிப்படையிலான வன்முறைகள் பல்கலைக் கழகங்களில் நிகழும் போது முறைப்பாடு செய்வதற்காக அவசர அழைப்பு (Hot line) சேவையொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

காலைக்கதிர் Kalaikathir



# மோடியின் பதவி ஏற்பு விழாவுக்கு ராஜபக்‌ஷவை ஏன் அழைத்தீர்கள்?

## பா.ஜ.கவினரிடம் தமிழக காங்கிரஸ் தலைவர் அழகிரி கேள்வி



சென்னை,மார்ச் 18

ராஜீவ் – ஜெயவர்த்தனே ஒப்பந்தம்தான் இன்றைக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு பாதுகாப்பு கவசமாக இருப்பதை பா.ஜ.கவின் தமிழிசையால் மறுக்க முடியுமா? மோடி பதவி ஏற்பு விழாவில் ராஜபக்‌ஷவை ஏன் அழைத்தீர்கள்? – என்ற. காங்கிரஸ் கட்சியின் மாநில தலைவர் கே.எஸ்.அழகிரி கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்ற தேர்தலில் தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி தி.மு.கவுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிடுகிறது. கூட்டணியில் காங்கிரஸ் கட்சிக்கு புதுச்சேரி உட்பட 10 தொகுதிகள் ஒதுக்கப்பட்டு இருக்கின்றன.

இதைத்தொடர்ந்து தேர்தல் பணிகளில் காங்கிரஸ் கட்சி தீவிரமாக ஈடுபட்டுள்ளது. அந்தவகையில் தமிழகத்தில் 9 தொகுதிகளில் போட்டியிட விரும்புபவர்களுக்கான விருப்ப மனு விநியோகம் மற்றும் தேர்தல் பிரசாரக்குழு கூட்டம் சென்னை சத்தியமூர்த்திபவனில் நடந்தது.

இந்த கூட்டத்துக்கு தமிழக காங்கிரஸ்கட்சித்தலைவர் கே.எஸ். அழகிரி தலைமை தாங்கினார். தேர்தல் பிரசாரக்குழு தலைவரும், தமிழக காங்கிரஸ் முன்னாள் தலைவருமான திருநாவுக்கரசர் முன்னிலை வகித்தார்.

கூட்டத்துக்கு இடையில் கே.எஸ்.அழகிரி நிருபர்களிடம் கூறியவை வருமாறு: –

ராகுல்காந்தி சென்னை வந்தமை பற்றி டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன் பல்வேறு கேள்விகளை கேட்டு இருக்கிறார். அதில் எந்தப் பொருளும் இல்லை.

இலங்கைத் தமிழர் பிரச்சினையைப் பற்றி தமிழிசை நீலிக் கண்ணீர் வடிக்கிறார். இலங்கைத் தமிழர்களின் வாழ்வில் மகிழ்ச்சி ஏற்பட வேண்டும் என்ற நோக்கத்தில் மறைந்த பிரதமர் ராஜீவ் காந்தி செயல்பட்டமையை எவரும் மறந்திருக்க முடியாது. ராஜீவ்– ஜெயவர்த்தன ஒப்பந்தம்தான் இன்றைக்கும் இலங்கை தமிழர்களுக்கு பாதுகாப்பு கவசமாக இருப்பதை தமிழிசையால் மறுக்க முடியுமா? அதனால்தான் ராஜீவ் காந்தி தீவிரவாத அமைப்பால்படுகொலை செய்யப்பட்டார். இத்தகைய உயிர் தியாகத்தைச் செய்தது காங்கிரஸ் கட்சிதான். அதன் தலைவராக இருக்கிற ராகுல் காந்தியை விமர்சிக்க தமிழிசைக்கு என்ன தகுதி இருக்கிறது? இலங்கை பிரச்சினையில் என்ன செய்தீர்கள் என்று அவர் கேட்டு இருக்கின்றமை விசித்திரமாக இருக்கிறது. மோடி பதவி ஏற்பு விழாவில் ராஜபக்‌ஷவை ஏன் அழைத்தீர்கள்?. இந்தியாவை ஒற்றுமையாகவும், வளர்ச்சி பாதையிலும் கொண்டு செல்லும் பணியில் காங்கிரஸ் கட்சி 60 ஆண்டுகளாக ஈடுபடுகிறது.

எங்கள் கட்சியை போன்று தியாகவரலாறு வேறு எந்த கட்சிகளுக்கும் கிடையாது. குறிப்பாக பா.ஜ.க.வுக்கு இல்லை. சுதந்திர போராட்டத்துக்கு பாடுபட்டவர்கள் என்று பா.ஜ.க.வில் யாரையாவது இப்போது சொல்ல முடியுமா? தியாக பரம்பரையை பார்த்து தமிழிசை கேள்வி கேட்பதா? – என்றுகேள்விஎழுப்பினார் அழ்கிரி.

# மூன்றாம் பாலினத்தவர்களாக மாற இருந்த மூன்று இளைஞர்கள் தற்கொலைக்கு முயற்சி

## இருவர் உயிரிழப்பு; ஒருவர் நிலை கவலைக்கிடம்

மதுரையில் தனியார் கல்லூரியில் ஒரே வகுப்பைச் சேர்ந்த 3 மாணவர்கள் விஷம் அருந்தியமையில் இரு வர் உயிரிழந்தனர். மற்றொருவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வரு கிறது. இவர்கள் மூவரும் மூன்றாம் பாலினத்தவராக மாற முயற்சித்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மதுரை செல்லூர் அகிம்சாபுரத்தைச் சேர்ந்த முருகன் மகன் பரத், மதுரை பிபி குளத்தைச் சேர்ந்த முத் துப்பாண்டி, செல்லூரைச் சேர்ந்தவர் பழனிக்குமார். இவர்கள் மூவரும் நண்பர்கள். இவர்கள் மூவரும் மதுரை தெப்பக்குளத்தில் உள்ள தனியார் கல்லூரியில் பி.ஏ. பொருளாதாரம் பிரிவில் முதலாம் ஆண்டு படித்து வந்தனர்.

இவர்கள் மூவரும் சில தினங்களுக்கு முன் நெல்பேட்டையில் விஷம் குடித்து தற்கொலைக்கு முயன்றனர். இதில் பரத் மதுரை அரசு மருத்துவ மனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட நிலையில் மறுநாள் இறந்தார். இது தொடர்பாக செல்லூர் பொலிஸார் சந்தேக மரணம் என வழக்குபதிந்து விசாரித்து வருகின்றனர். தொடர் சிகிச்சையில் இருந்த முத் துப்பாண்டி சிகிச்சை பலனின்றி மதுரை அரசு மருத்துவ மனையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். பழனிக்குமார் தற்போது தீவிர சிகிச்சை பெற்று வருகிறார். இந்த சம்பவம் குறித்து செல்லூர், தல்லாகுளம் பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

இது குறித்து பொலிஸ் தரப்பில் கூறப்படுபவை வருமாறு:–

தனியார் கல்லூரியில் படிக்கும் பரத், முத்துப்பாண்டி, பழனிக்குமார் ஆகிய 3 பேரும் நெல்பேட்டையில் விஷம் குடித்து தற்கொலைக்கு முயற்சித்துள்ளனர். இச்சம்பவம் குறித்துப் பொலிஸார் விசாரித்தபோது 3 பேரும் இணைபிரியாத நண்பர்கள் எனவும், மூன்றாம் பாலினத்தவராக மாறுவதற்கான முயற் சியில் இருந்தனர் எனவும் தெரிகிறது. இவர்களது நடத்தையை கல்லூரியில் பிற மாணவர்கள் அடிக்கடி கேலி செய்தமையால், விரக்தியில் அவர்கள் தற்கொலைக்கு முயன்றனர் எனக் கூறப்படுகிறது. இவர்களது தற்கொலைக்கு ராகிங் போன்று வேறு காரணம் எதுவும் உள்ளதா என விசாரித்து வருகிறோம்– என்றனர்.

அவர்களது உறவினர்கள், கல் லூரியில் சக மாணவர்களின் ராகிங் கொடுமையால் தான் தங்கள் மகன்கள் தற்கொலை செய்தனர் எனவும், சம் பந்தப்பட்ட மாணவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தல்லாகுளம் பொலிஸில் புகார் தெரிவித்துள்ளனர்.

## இந்தியாவின் ஆளில்லா உளவு விமானத்தைச் சுட்டு வீழ்த்தியதாக அறிவித்தது பாகிஸ்தான்

பாகிஸ்தான் நாட்டு வான எல்லைக்குள் ஊடுருவிய இந்திய ஆளில்லா உளவு வானூர்தி ஒன்றைத் தாம் சுட்டு வீழ்த்தியுள்ளனர் எனப் பாகிஸ்தான் இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

ராக்சிக்ரி செக்டார் பகுதியில் சுமார் 150 மீற்றர் ஊடுருவிய ஆளில்லா உளவு வானூர்தியே சுட்டு வீழ்த்தப்பட்டதாக பாகிஸ்தான் இராணுவத்தின் செய்தித் தொடர்பாளர் ஆசிப் கபூர் தெரிவித்துள்ளார்.



# நியூஸிலாந்து துப்பாக்கிச் சூட்டில் பலியான 50 பேரில் ஐவர் இந்தியர்

கிறைஸ்ட்சேர்ச்,மார்ச் 18

நியூஸிலாந்து மசூதிகளில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் பலியானவர்களில் 5 பேர் இந்தியர்கள் என்று அங்குள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

கிறைஸ்ட்சேர்ச் நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள அல் நூர் மசூதியிலும், லின்உட் மஸ்ஜித் மசூதியிலும் கடந்த வெள்ளியன்று தீவிரவாதிகள் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இந்தத் துப்பாக்கிச்சூட்டில் பலியானவர்கள் எண்ணிக்கை 50 ஆக அதிகரித்துள்ளது.

பலியானவர்களில் இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஜோர்தான் எனப் பல நாடுகளில் இருந்து சென்று நியூஸிலாந்தில் குடியேறியவர்களும் அடங்குவார்கள். இதேபோன்று பல்வேறு நாட்டினர் படுகாயங்களுடன் சிகிச்சை பெறுகின்றனர். அவர்கள் எல்லோரையும் அடையாளம் காணும் பணி நடந்து வருகிறது.

அந்த வகையில், இந்த துப்பாக்கிச்சூட்டில் 5 இந்தியர்கள் பலியாகியிருக்கின்றனர் என நியூஸிலாந்துக்கான இந்தியத் தூதர் தெரிவித்துள்ளார். இதே போன்று எகிப்து, பாகிஸ்தானை சேர்ந்த தலா 4 பேர், பங்களாதேஷைச் சேர்ந்த 2 பேர் பலியானமை உறுதியாகி உள்ளது.

நியூஸிலாந்து நாட்டில் சுமார் 2 லட்சம் இந்தியர்கள் வசித்து வருகின்றனர்.

கிறைஸ்ட்சேர்ச் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு துரிதமாக விசா வழங்குவதற்காக பிரத்யேக இணையப்பக்கத்தையும் நியூஸிலாந்து அரசு உருவாக்கியுள்ளது. அதேபோல், உதவி எண்களும் வெளியிடப்பட்டன. இந்த தகவல்களை நியூஸிலாந்தில் உள்ள இந்திய தூதரகம் தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளது. பலியான இந்தியர்களின் விவரங்களும் வெளியிடப்பட்டுள்ளன.



# பெண் இராணுவ அதிகாரியின் மீது பாலியல் வன்முறை புரிந்த மேஜர்!

பெங்களூருவில் பெண் இராணுவ அதிகாரியைப் பாலியல் வன்கொடுமை செய்தார் எனத் தொடரப்பட்ட வழக்கில் மேஜர் பதவியில் இருக்கும் அதிகாரியிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பெங்களூருவில் உள்ள ஏ.எஸ்.சி. மையத்தில் கடந்த மாதம் 4ஆம் திகதி இராணுவ அதிகாரி ஒருவர் ஓய்வு பெற்றமையையொட்டி இரவு விருந்து நிகழ்ச்சி நடந்தது.

அந்த விருந்து முடிந்த பிறகு, மேஜர் அமித் சவுத்ரி என்பவர் தன்னுடன் பணியாற்றும் 29 வயதான பெண் அதிகாரியை வீட்டில் விடுவதற்காக தனது காரில் அழைத்துச் சென்றுள்ளார்.

மது போதையில் இருந்த அவர், பழைய விமான நிலைய சாலையில் காரை நிறுத்தி, பெண் இராணுவ அதிகாரியை பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். இது குறித்து புகார் அளித்தால் கொலை செய்துவிடுவேன் எனவும் மிரட்டியுள்ளார்.

இதையடுத்துப் பாதிக்கப்பட்ட பெண் அதிகாரி, அதற்கு மறுநாள் இந்த சம்பவம் குறித்து தமது இராணுவ உயர் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார். இதனைத் தொடர்ந்து, இராணுவ அதிகாரிகளின் வழிகாட்டுதலின்படி, இச்சம்பவம் தொடர்பாக விவேக் நகர் காவல் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டது. அமித் சவுத்ரிக்கு மார்ச் 23 ஆம் திகதி வரை இடைக்காலப் பிணை அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் அவரை கைது செய்யவில்லை – என பெங்களூரு மாநகர கிழக்கு உதவி ஆணையர் ராகுல் குமார் கூறியுள்ளார்.

காலைக்கதிர் Kalaikathir



# நியூஸிலாந்து மசூதித் தாக்குதலுக்கு சற்று முன்னர் அது குறித்துப் பிரதமருக்கு மின்னஞ்சலில் தகவல்!

## கொலையாளி அனுப்பினார் என பிரதமர் ஜெசிந்தா ஆர்டன் தெரிவிப்பு



நியூஸிலாந்தில் கடந்த வெள்ளிக்கிழமை இருவேறு மசூதிகளில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல் தொடர்பாக, கொலைக் குற்றச்சாட்டுகளின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள, ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த 28 வயதாகும் பிரெண்டன் டாரண்ட் எனும் நபர் தனியாக திட்டம்தீட்டியே இதனைநடத்தியுள்ளார் என நியூஸிலாந்து காவல் துறையினர் நம்புகின்றனர்.

மேலும் அவருடன் கைதான மூவருக்கும் இந்தத் தாக்குதலில் தொடர்பில்லை எனத் தோன்றுவதாக கிரைஸ்ட்சேர்ச் நகர காவல் ஆணையர் மைக் புஷ் கூறியுள்ளார்.

தம்மை வெள்ளை இனவாதியாகக் கூறிக்கொள்ளும் அந்த நபர், தாக்குதல் சம்பவத்தை தனது முகப் புத்தகப் பக்கத்தில் நேரலையாக ஒளிபரப்பு செய்தார்.

நியூஸிலாந்தின் கிழக்கு கடலோர நகரமான கிரைஸ்ட்சேர்ச்சிலுள்ள இருவேறு மசூதிகளில் துப்பாக்கி தாரி நடத்திய தாக்குதலில் இதுவரை 50 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிகிறது.

இந்நிலையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கிரைஸ்ட்சேர்ச் நகரத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த நியூஸிலாந்துப் பிரதமர் ஜெசிந்தா ஆர்டர்ன், கிரைஸ்ட்சேர்ச்சின் இருவேறு மசூதிகளில் துப்பாக்கிச்சூடு நடத்தியவர் எனச் சந்தேகிக்கப்படும் நபர், அந்தத் தாக்குதலைத் தொடுப்பதற்கு சுமார் ஒன்பது நிமிடங்கள் முன்னதாக அது. குறித்த அறிக்கை ஒன்றை, எனக்கு உள்பட 30 பேருக்கு மின்னஞ்சல் செய்தார் என்று கூறினார்.

இருப்பினும், அந்த மின்னஞ்சலில், தாக்குதல் நடத்தப்படுவதற்காக குறிப்பிட்ட காரணமோ அல்லது நிகழ்விடத் தகவலோ குறிப்பிடப்படவில்லை என்றும், அந்த மின்னஞ்சல் தனக்கு கிடைக்கப்பெற்ற இரண்டே நிமிடங்களில் அது குறித்துப் பாதுகாப்பு படையினருக்கு தெரியப்படுத்தப்பட்டதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.




இதை ஒரு தீவிரவாதத் தாக்குதல் என்றுதான் கூற முடியும். நீங்கள் அனைவரும் அந்த தாக்குதல் காணொலியைப் பார்த்திருப்பீர்கள் என நம்புகிறேன். தீவிரவாத எண்ணம் கொண்டவர்களுக்கு நியூஸிலாந்திலும் இந்த உலகத்திலும் இடமில்லை, என நியூசிலாந்து பிரதமர் கூறியுள்ளார்.

# இடாய்' புயலினால் மொஸாம்பிக், ஸிம்பாப்வே, மலாவியில் பெரும் சேதம்; 150 பேர் சாவு; பல நூறு பேரைக் காணோம்

## வெள்ளத்துக்கு மத்தியில் நிர்க்கதி நிலையில் 15 லட்சம் மக்கள்





ஆப்பிரிக்க நாடுகளில் 'இடாய்' புயல் தாக்குதலினால் ஏற்பட்ட வெள்ள பாதிப்பு

மொஸாம்பிக், ஸிம்பாப்வே மற்றும் மலாவி ஆகிய நாடுகளில் 'இடாய்' புயலின் கோரத் தாண்டவத்தால் இதுவரை 150 பேர் உயிரிழந்துள்ளனர்; நூற்றுக்கணக்கானவர்கள்ள காணவில்லை. மற்றும் பின்தங்கிய கிராமப்புறப் பகுதிகளில் சாலைகள் துண்டிக்கப்பட்டுள்ளமையால் பல்லாயிரக்கணக்கானோர் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர். அருகருகே உள்ள மூன்று தெற்கு ஆபிரிக்க நாடுகளில் 15 லட்சம் மக்கள் இடாய் புயலில் சிக்கி கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என ஐ.நா. மற்றும் அரசு உயரதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மொஸாம்பிக்கின் பெய்ரா நகரில் விமானநிலையம் மூடப்பட்டுவிட்டது, இங்கு மின்சாரம் முழுமையாக துண்டிக்கப்பட்டதோடு, பல வீடுகள் அழிந்து விட்டன.

கடந்த வியாழன் இரவு தாக்கத் தொடங்கிய புயல் ஸிம்பாப்வே மற்றும் மலாவி ஆகிய இடங்களுக்கு மேற்கு நோக்கி நகர்ந்ததால் ஆயிரக்கணக்கான மக்கள் பாதிப்புக்குள்ளாகினர். குறிப்பாக இதன் தாக்கம் மொஸாம்பிக் கிழக்கு எல்லைப் பகுதிகளில் இருந்தது.

வீடுகள், பள்ளிகள், தொழிற்சாலைகள், மருத்துவமனைகள் மற்றும் பொலிஸ் நிலையங்கள் சூறாவளியினால் அழிக்கப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான மக்கள் வெள்ளப்பெருக்கில் சிக்கியபோது, தங்கள் உயிர்களை மட்டுமே காப்பாற்றிக்கொள்ள மேட்டுப்பாங்கான இடங்களைத் தேடி, தங்கள் உடைமைகளை கைவிட்டு ஓடித் தப்பினர்.

ஐ.நா. அமைப்புகளும், செஞ்சிலுவை சங்கமும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிக்கரம் நீட்டி மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளன. ஹெலிக்கொப்டர் மூலம் அவர்களுக்கு உணவு மற்றும் மருந்துகள் வழங்கப்படுகின்றன.



மொஸாம்பிக் அதிபர் பிலிப் நியூஸி வானொலியில் பேசுகையில், வெள்ளம் பாய்ந்துள்ள இடங்களில் மீட்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க விமானங்களைத் தரையிறக்குவது மிகவும் கடினமாகியுள்ளது என்றும் மிகவும் கவலைக்குரிய வகையில் கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

வெள்ளம் பாதித்த பகுதிகளில் உள்நாட்டு பேரிடர் மீட்பு சேவைகள் வேகமாக செயல்படாத நிலை ஏற்பட்டுள்ளதால் இங்கு 15 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் கடும் சிக்கல்களை சந்தித்து வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

# இந்தோனேஷியாவில் பேய் மழை; 42 பேர் சாவு; 21 பேர் வரை காயம்





இந்தோனேஷியாவின் பபுவா மாகாணத்தில் நேற்றுமுன்தினம் பெய்த கனமழைக்கு 42 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். ஏராளமான வீடுகள் சேதமடைந்தன.

இந்தோனேஷியாவின் கிழக்கு மாகாணம் பபுவாவின் தலைநகரம் ஜெயபுரா அருகில் உள்ள சென்டானியில் சனின்று பேய்மழை பெய்தது. இதில் பல வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன.

இந்த பேய்மழைக்கு 42 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 21 பேர் காயமடைந்துள்ளனர். தற்போது மழை குறைந்துள்ளது. என்றாலும், மக்களை வெளியேற்றும் பணியில் அதிகாரிகள் துரிதமாக செயல்பட்டு வருகின்றனர். இன்னும் பலர் மழை வெள்ளத்தில் சிக்கியிருக்கின்றமையால் பலி எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக மீட்புப்பணி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் சுவாவேசித் தீவில் மழை மற்றும் நிலச்சரிவால் 70 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தோனேஷியாவில் வழக்கமாக ஒக்டோபர் முதல் ஏப்ரல் மாதம் மழைக்கால மாகும்.

காலைக்கதிர் Kalaikathir



# ஜனாதிபதித் தேர்தல்:

# 3 முக்கிய கட்சிகளின் வேட்பாளர்கள் களத்தில் குதிக்கும் நிலைமை!

இந்த ஆண்டு இறுதியில் அல்லது 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித்தேர்தலில்ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியை மையப் படுத்திய கூட்டு எதிர்க்கட்சியின் ஜனாதி பதி வேட்பாளராக இலங்கையின் முன் னாள்பாதுகாப்புச்செயலாளர்கோட்டாபய ராஜபக்ஷவை நியமிப்பதற்கு மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார் எனக் கட்சித் தகவல்கள் கூறுகின்றன. தனது அமெரிக்கப் பிரஜாவுரிமையை நீக்கக் கோரும் விண்ணப்பத்தைக் கடந்த வாரம் கோட்டாபய ராஜபக்ஷ, அமெ ரிக்க இராஜாங்க திணைக்களத்துக்கு உத்தியோகபூர்வமாக அனுப்பி வைத்த



தார் எனச் செய்திகள் ஏலவே வெளியாகி யிருந்தன. இந்த நிலையில், ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு உள்ளக ரீதியாக முடிவுசெய்யப்பட்டுள்ளதாக மஹிந்ததரப் புத் தகவல்கள் கூறுகின்றன.

ஆனால்ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் கட்சியின் தலை வரான மைத்திரிபால சிறிசேனவே என்று கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

தமிழரசுக் கடசியை மையப்படுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது மக்கள் வெறுப்பும் சலிப்பும் கொண்டுள்ள தால் ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு – கிழக்கு தமிழ் மக்கள் வாக்களிப்பதில் இருந்து ஒதுங்கிவிடக் கூடும். அவ்வாறு ஒதுங்கினால் தேர்தல் முடிவுகளில் நெருக் கடி ஏற்படலாம்.

கட்சியின் தனித்துவத்தை இழந்து விட்டு, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியுடன் கூட்டணி அமைப்பதற்கு



## தமிழரின் நிலை என்ன?

தயாராக இல்லையென்றும் கட்சியை மையப்படுத்திய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி இணைந்து கொள்ளலாம் எனவும் தயாசிறி ஜயசேகர நேற்றுமுன்தி னம் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

அதேவேளை, கோட்டாபய ராஜபக்ஷ அல்ல, எந்த கொம்பன் ஜனாதிபதி வேட் பாளராகப் போட்டியிட்டாலும் ஜனாதிப தித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரே வெற்றி பெறுவாரென இரா ஜாங்க அமைச்சர் அசோக்க அபேசிங்க நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கொழும் பில் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

ஆகவே ஏட்டிக்குப்போட்டியாக ஜனாதி பதித் தேர்தல் வேட்பாளர் தெரிவில்

மைத்திரி. மஹிந்த அணி மோதுவதாகக் கூறிய கொழும்பு அரசியல் வட்டாரங்கள், இந்த முறை நடைபெறவுள்ள ஜனாதி பதித் தேர்தலில் முக்கியமான மூன்று வேட்பாளர்கள் தேர்தலில் களமிறங்குவர் என்றும் கூறியுள்ளன.

முதன் முறையாக மூன்று பிரதான வேட் பாளர்கள் ஜனாதிபதித் தேர்தலில் களமி றங்கவுள்ளமை உறுதியாகிவிட்டது. ஆனால் தமிழ்த் தரப்பு இம்முறை ஜனாதி பதித் தேர்தலில் எடுக்கப் போகும் நிலைப் பாடு குறித்து சர்வதேசம் ஆவலோடு எதிர்பார்க்கும்.

அன்றில் இருந்து இன்று வரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த வர்கள்தான் ஜனாதிபதியாகப் பதவி வகிக் கின்றனர்.

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன ஐக்கிய தேசியக் கட்சியை மையப்படுத்திய கூட்டு எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளராகப் போட்டி

யிட்டு வெற்றி பெற்றிருந்தார்.

ஆனாலும் அவர் ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியை மையப்படுத்திய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஜனா திபதிபோன்றேசெயற்பட்டுவருகின்றார்.

உதாரணமாக கடந்த ஆண்டு ஒக் ரோபர் மாதம் 26 ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்ததன் மூலம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி என்றே அவர் தன்னை அடையாளப்படுத்திவிட்டார்.

இந்த நிலையில் இந்த ஆண்டின் இறுதியில் அல்லது அடுத்த ஆண்டு இறுதியில் நடைபெறவுள்ள ஜனாதிப

மைத்திரி, மஹிந்த மோதலினால் ஒரே கொள்கையுடைய கட்சிகள் இரண்டு வேட்பாளர்களை களமிறக்கும் போது, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சிக்கே ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி அதிகமாக சாத்தியப்ப டலாம் என்றும் கொழும்பு அரசியல் தக வல்கள் தெரிவிக்கின்றன.

1994 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பி னர் டி.பி.விஜயதுங்க ஜனாதிபதிப் பதவியில் இருந்து விலகினார்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மையப்ப டுத்திய பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் சந்திரிகா 1994 ஆம் ஆண்டு ஓகஸ்ட்மாதம்ஜனாதிபதியாகப்பதவியேற்றார்.

ஏறத்தாழ 17 வருடங்களின் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இலங்கையின் ஆட்சியைக் கைப்பற்றியது.

இலங்கை ஜனாதிபதித் தேர்தலில்

> தமிழரசுக் கடசியை மையப்படுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது மக்கள் வெறுப்பும் சலிப்பும் கொண்டுள்ளதால் ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு – கிழக்கு தமிழ் மக்கள் வாக்களிப்பதில் இருந்து ஒதுங்கிவிடக் கூடும். அவ்வாறு ஒதுங்கினால் தேர்தல் முடிவுகளில் நெருக்கடி ஏற்படலாம்.

ஆனால் இம்முறை முதன் முறை யாக மூன்று பிரதான வேட்பாளர்கள் ஜனாதிபதித்தேர்தலில்களமிறங்கவுள்ளமை உறுதியாகிவிட்டது. ஆனால் தமிழ்த் தரப்பு இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் எடுக்கப் போகும் நிலைப்பாடு குறித்து சர்வதேசம் ஆவலோடு எதிர்பார்க்கும்.

2015 ஆம் ஆண்டுத் தேர்தலில் வடக்கு – கிழக்கு மக்கள் குறிப்பாக வட மாகாண மக்கள் மைத்திரிபால சிறிசேன



வுக்கு வாக்களிக்காமல் தவிர்த்திருந்தால் மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவை யாகவும் ஜனாதிபதியாகப் பதவியேற்றி ருப்பார்.

ஆனால், இந்த முறை நடைபெற வுள்ள தேர்தலில் வடக்கு –கிழக்கு மக்க ளும் முஸ்லிம் மலையகத் தமிழ் மக்க ளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கே கூடுதலாக

## 25 வருடங்களின் பின்னர் ஐ.தே.கவுக்கு அதிக வாய்ப்பு



தித் தேர்தலில் நிச்சயமாக ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் வெற்றி பெற்று ஜனாதிபதியாகப் பதவியேற்கும் சாத்தி யங்கள் அதிகமாக உண்டு.

**ஐ.தே.கவுக்கு அதிக வாய்ப்பு**

ஆகவே 25 வருடங்களின் பின்னர் மீண்டும் ஜனாதிபதிக் கதிரையில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் அமரப் போகின்றார் என்பது உறுதியாகி விட்டதாக கொழும்பு அரசியல் வட்டாரங் கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேம தாச. அல்லது தற்போது சபாநாயகராக பதவி வகிக்கும் கட்சியின் மூத்த உறுப்பி னர் கரு ஜயசூரிய ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்படலாம் என கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

எனினும் ரணில் விக்கிரமசிங்கவே ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்படு வார் என கட்சியின் மூத்த உறுப்பினர்கள் தமக்கு நெருக்கமான செய்தியாளர்களி டம் கூறியுள்ளனர்.

எவ்வாறாயினும் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் கடும் போட்டி நிலவப் போகின்றது. 51 சதவீதத்துக்கும் குறைவான வாக்குகளையே மூன்று பிரதான வேட்பாளர்களும்.பெறக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றமையைக் கடந்த கால ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் கோடிட்டுக் காண்பிக்கின்றன.

இலங்கை அரசியல் வரலாற்றில் நான்கு அல்லது ஐந்துபேர் ஜனாதிப தித் தேர்தலில் போட்டியிட்டிருக்கின்றனர். அதில் ஐக்கிய தேசியக் கட்சி. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த இருவர் மாத்திரமே பிரதான வேட்பாளர்களாக இருந்தனர்.

வாக்களிக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு.

எனினும் தமிழரசுக் கடசியை மையப் படுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது மக்கள் வெறுப்பும் சலிப்பும் கொண் டுள்ளதால் ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு – கிழக்கு தமிழ் மக்கள் வாக்களிப்பதில் இருந்து ஒதுங்கிவிடக் கூடும்.

அவ்வாறு ஒதுங்கினால் தேர்தல் முடிவுகளில் நெருக்கடி ஏற்படலாம். ஏனெனில் ஒரே கொள்கையைக் கொண்ட மைத்திரிபால சிறிசேனவை மையப் படுத்திய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மகிஹிந்தவை மையப்படுத்திய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியும் வெவ் வேறு கோணத்தில் நின்று போட்டியிட்டால், நிச்சயம் வாக்குகள் சிதறக்கூடிய அல்லது பௌத்த சிங்கள மக்களின் வாக்களிப்பு வீதம் குறைவடையக் கூடிய நிலையும் வரலாம்.

அவ்வாறான நிலை உருவாகுமா னால், இலங்கைத் தேர்தல் விதிகளின் பிரகாரம் ஜனாதிபதியாகத் தெரிவு செய் யப்படுவதற்கான குறைந்தபட்ச 50 தசம் ஒரு வீத வாக்குகளைக் கூட எந்தத் தரப் பும் பெறமுடியாத நிலைமை ஏற்படும் சாதியங்கள் உண்டு.



ஆனால் மைத்திரி - மஹிந்த மோதல் பௌத்த சிங்கள மக்களின் வாக்களிப்பு வீதத்தை மேலும் அதிகரிக் கலாம் எனவும் அது சில சமயங்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்கான வாக்குகளா கக் கூட மாற்றமடையலாமெனவும் தேசிய சமாதானப் பேரவையின் கணிப் பீடு ஒன்று தெரிவிக்கின்றது.

நன்றி: கூர்மை

# இலங்கையுடன் இராஜதந்திர, இராணுவ உறவுகளை அமெரிக்கா வலுப்படுத்துவது காலத்தின் கட்டாயமாம்

## அந்நாட்டு ஆய்வாளர் ஜெப் ஸ்மித் விளக்குகின்றார்

வொஷிங்டன்,மார்ச்18

இலங்கையுடன் இராஜதந்திர மற்றும் இராணுவ தொடர்புகளுக்கு அமெரிக்கா முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று அமெரிக்காவின் பழமைவாத சிந்தனையாளரான ஆய்வாளர் ஜெப் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

வொஷிங்டனைத் தளமாகக் கொண்ட, ஹெரிரேஜ் பவுண்டேசனின் ஆய்வாளர் ஜெப் ஸ்மித் தயாரித்துள்ள 'இலங்கை: சுதந்திரமான திறந்த இந்தோ – பசுபிக் மூலோபாயத்துக்கு ஒரு சோதனையான வழக்கு' என்ற தலைப்பிலான அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கை விவகாரம், தவறாக கையாளப்பட்டால், இலங்கையில் ராஜபக்ஷவினர் மீண்டும் ஆட்சிக்கு வரும் நிலை ஏற்படும்.

அது, 2015 ஆட்சி மாற்றத்தை அடுத்து இலங்கை – அமெரிக்கா இடையிலான உறவுகளில் அண்மையில் பெற்றுக் கொள்ளப்பட்ட வெற்றிகளை பாதிக்கும்.

அத்துடன், இந்தியப் பெருங்கடலில் சீனா காலூன்றுவதற்கு வழிவகுக்கும். சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான போட்டி அதிகரிக்கும்,

டிரம்ப் நிர்வாகத்தின் பிராந்திய மூலோபாயத்திற்கு ஒரு பின்னடைவை ஏற்படுத்தும்.

ஆட்சிக்கவிழ்ப்பு தோல்வியடைந்தாலும், வரவிருக்கும் தேர்தல்களில் செல்வாக்குமிக்க ராஜபக்ஷ குடும்பத்தினர், அதிகாரத்திற்குத் திரும்புவர் என்று அரசியல் ஆய்வாளர்கள் கணிக்கின்றனர்.

2015இல் மஹிந்த ராஜபக்ஷ வெளியேற்றப்பட்டமையில் இருந்து, இலங்கை – அமெரிக்க உறவுகள் தழைத்தோங்கியுள்ளன.

இந்தியப்பெருங்கடலில் அமெரிக்க கடற்படையின் புதிய விநியோக கேந்திரமாக இலங்கை மாறியுள்ளது.

ஒருவேளை அவ்வாறு நடந்து, ராஜபக்ஷவினர் மீண்டும் அதிகாரத்துக்கு வந்தால், ஒரு வரம்புக்குட்பட்டு, இலங்கை மக்களின் விருப்பங்களை மதிக்க அமெரிக்கா தயாராக இருக்க வேண்டும்.

அடிப்படை ஜனநாயகம் மற்றும் மனிதாபிமானத்தரங்களுக்கு பொறுப்புக் கூறும் வகையில் எந்தவொரு எதிர்கால இலங்கை அரசாங்கத்தையும் நடத்த வேண்டும்.



இலங்கையுடன், இராஜதந்திர மற்றும் இராணுவ உறவுகளுக்கு அமெரிக்க அரசாங்கம் முன்னுரிமை அளிக்க வேண்டும். சீனாவின் பாதை மற்றும் அணை முனைப்புத் திட்டத்துக்கு மாற்றாக, பிராந்தியக் கூட்டுகள் மற்றும் புதிய அபிவிருத்தி நிதிக் கருவிகளை இலங்கைக்கு வழங்க வேண்டும்.

"ராஜபக்ஷ ஆட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர் இலங்கை அதிகம் சுதந்திரமான, திறந்த நாடாக மாறியுள்ளது.

அடுத்து எந்த அரசாங்கம் பதவிக்கு வந்தாலும், இந்தப் போக்கில் இருந்து மாறாத தன்மையை உறுதிப்படுத்துவதற்கு அமெரிக்காவும், இலங்கையும் ஆர்வம் கொண்டுள்ளன – என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடன் கொடுத்து நாடுகளைச் சூறையாடுகின்ற தந்திரோபாயத்தில் மும்முரம் காட்டுகிறது சீனா

## இலங்கை உட்பட்ட தேசங்கள் குறித்து அமெ. கூட்டுப்படைத் தளபதி எச்சரிக்கை

இலங்கை உள்ளிட்ட சில நாடுகளில் சூறையாடும் கடன் தந்திரோபாயங்களை சீனா கையாளுகிறது என்று அமெரிக்காவின் கூட்டுப்படைகளின் தளபதி ஜெனரல் ஜோசெப் டன்போர்ட் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க செனட்டின், ஆயுதப் படை சேவைகள் குழுவின் முன்பாக விளக்கமளித்த போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

சீனாவின் இந்த தந்திரோபாயத்துக்கு சில உதாரணங்கள் உள்ளன.

சூறையாடும் சீன கடன்களைச் சுமக்க முடியாமல், ஆழ்கடல் துறைமுகத்தின் 70 வீத பங்குகளை சீனாவுக்கு 99 ஆண்டு குத்தகைக்கு இலங்கை வழங்கியுள்ளது.

எல்லாக் காலத்திலும் நண்பன் என்று பாகிஸ்தான் கூறுகின்ற சீனாவிடம், குவடார் துறைமுகம் மற்றும் ஏனைய திட்டங்களுக்காக 10 பில்லி



யன் டொலர் கடன்பட்டுள்ளது.

கேந்திர முக்கியத்துவம் மிக்க குவடார் துறைமுகம் பலுசிஸ்தான் மாகாணத்தில், சீனாவினால் கட்டப்படுகிறது.

சீனாவிடம் கட்டுமான வேலைகளுக்காக 1.5 பில்லியன் டொலர் கடன்பட்டுள்ளது மாலைதீவு. இது மாலைதீவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 30 வீதமாகும்.

சூறையாடும் பொருளாதாரம் மூலம், தனது செல்வாக்கை விரிவுபடுத்தி, சீனா ஒரு அனைத்துலக வலையமைப்பை வலுக்கட்டாயமாக கட்டியெழுப்பி வருகிறது.

சீனாவின் சூறையாடும் கடன் தந்திரோபாயங்களைக் கவனிக்காவிட்டால், அது அமெரிக்க இராணுவத்தில் தீவிரமான தாக்கங்களை ஏற்படுத்தும்.

சீனா தனது இராணுவத்தை விரிவுபடுத்தவதன் மூலமும் அண்டை நாடுகள் மீதான கட்டாய செயற்பாடுகளின் மூலமும், அதன் எல்லைகளை விரிவுபடுத்துகிறது.

இந்தோ – பசுபிக் பிராந்தியத்தில், குறிப்பாக தென் சீனக் கடலில், சீனாவின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளமை அனைவரையும் கவலை கொள்ள வைக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மின்வெட்டைச் சமாளிக்க செயற்கை மழை முயற்சி

கொழும்பு, மார்ச் 18

செயற்கை நடவடிக்கைகள் மூலம் மழை பொழிய வைப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கை அடுத்த வாரம் மேற்கொள்ளப்படும் என மின்வலு அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக நீர் மின் உற்பத்தி செய்வதில் பெரும் சிக்கல் எதிர்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது. மின்வெட்டை நடைமுறைப்படுத்துவது குறித்துச் சிந்திக்க வேண்டிய கட்டாயத்துக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது எனக் கூறப்பட்டது.

செயற்கை நடவடிக்கைகள் மூலம் மழையைப் பொழிய வைப்பதற்கான முயற்சிகள் நடக்கின்றன. அதற்குத் தாய்லாந்து நாட்டின் ஒத்துழைப்பை பெறுவது குறித்து ஆராயப்படுகிறது என இலங்கை மின்சார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

# காணி உறுதிப் பத்திரங்களில் 50 வீதம் போலியானவையாம்

## பதிவாளர் நாயகமே ஒப்புக்கொள்கிறார்

நாட்டிலுள்ள காணி உறுதிப்பத்திரங்களில் 40 முதல் 50 வீதமானவை போலியானவை எனத் திடுக்கிடும் தகவலை வெளியிட்டுள்ளார் பதிவாளர் நாயகம் என்.சி. விதானகே.

பிறப்பு, திருமண, இறப்புச் சான்றிதழ்களில் ஐந்திலொன்று போலியானவை எனக் கண்டறியப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

குழந்தைகளைப் பாடசாலைகளுக்குச் சேர்ப்பதற்காகவும், வங்கிக்கடன்களை பெறுவது உள்ளிட்ட பல தேவைகளுக்காகவுமே இவ்வாறான போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

எனவே, மோசடிகளைத் தடுப்பதற்காக நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, அனைத்து காணி மற்றும் பிறப்புச் சான்றிதழ்களைக் கணினி மயமாக்குவதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இவ்வருடம் முதல் பிரஜைகளின் தகவல்களும் கணினிமயப்படுத்தப்படவுள்ளன.

இதன்படி பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் இலக்கமொன்று வழங்கப்படுவதுடன், அதனையே தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு பயன்படுத்துவதற்கும், தேசிய அடையாளஅட்டையை பெறுவது உள்ளிட்ட பல்வேறு காரணிகளுக்குப் பயன்படுத்துவதற்கும் கூடிய வகையில் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது என்றார் அவர்.



பளை, பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் வண்ணாங்கேணி சரஸ்வதி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா பாடசாலை முதன்மை ஆசிரியர் ராஞ்சி தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பிரதம விருந்தினராக பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் கலந்துகொண்டதுடன் சிறப்பு விருந்தினர்களாக பிரதேச சபை உப தவிசாளர் மு. கஜன் கிராம அலுவலர்களான சுபாஷினி, சுதர்சன் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் பெற்றார்கள் மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# ஐ.பி.எல். திருவிழா மீண்டும்!

## 23இல் முதல் ஆட்டம் சென்னையில்



சென்னையில் வரும் 23 ஆம் திகதி நடைபெறும் ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டியின் தொடக்க லீக் ஆட்டத்துக்கான டிக்கெட் விற்பனைக்கு அமோக வரவேற்பு இருந்தது. நேற்று முன்தினம் ஒரே நாளில் எல்லா டிக்கெட்டுகளும் விற்றுத் தீர்ந் தன.

12ஆவது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் திருவிழா சென்னை யில் வருகிற 23 ஆம் திகதி தொடங்குகிறது. ஏப்ரல் 5 ஆம் திகதி வரையிலான இரண்டு வார காலத்துக்கான போட்டி அட்ட வணை மட்டும் வெளியிடப்பட்டுள் ளது. நாடாளுமன்ற தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டு விட்டதால் முழு அட்டவணையை இந்திய கிரிக்கெட் வாரியம் இன்று வெளி யிடும் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

சென்னை சேப்பாக்கம் ஸ்டே டியத்தில் வருகிற 23 ஆம் திகதி இரவு 8 மணிக்கு அரங்கேறும் தொடக்க லீக் ஆட்டத்தில் நடப்பு சாம்பியனான சென்னை சூப்பர் கிங்ஸ் அணி, பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ் அணியை எதிர் கொள்கிறது. சென்னையில் நடைபெறும் தொடக்க ஆட்டத்துக் கான டிக்கெட் விற்பனை சென்னை சேப்பாக்கம் ஸ்டேடியத்தில் உள்ள டிக்கெட் கவுண்ட்டரில் நேற்று முன்தினம் காலை 11.30 மணிக்கு தொடங்கியது.

டோனி தலைமையிலான சென்னை அணியும், விராட் கோஹ்லி தலைமையிலான பெங்களூரு அணியும் மோதும் தொடக்க ஆட்டத்தை காண ரசி கர்கள் மத்தியில் அமோக வர வேற்புக் காணப்பட்டது.

போட்டியை நேரில் பார்க்க ஆர்வம் கொண்ட ரசிகர்கள் வெள்ளி இரவு முதலே சேப்பாக் கம் ஸ்டேடியம் முன்பு திரளத் தொடங்கினார்கள். உள்ளூர் மட் டுமின்றி வெளியூரில் இருந்து வந்து இருந்த ரசிகர்களும் ஸ்டேடியத்துக்கு வெளியில் இர வையும் பொருட்படுத்தாமல் காத்து கிடந்தனர். மேலும் சனி அதிகாலை முதல் ரசிகர்களின் படையெடுப்பு அதிகரித்ததால் கூட்டத்தை கட்டுப்படுத்தும் பணி யில் பொலிஸார் ஈடுபடுத்தப்பட் டனர். ஒரு கட்டத்தில் ரசிகர்கள் இடையே தள்ளு, முள்ளு ஏற் பட்டது. இதையடுத்து பொலி ஸார் லேசான தடியடி நடத்திக் கூட்டத்தை ஒழுங்குபடுத்தினார் கள்.

### ஒரே நாளில் டிக்கெட்டுகள் எல்லாம் விற்றுத் தீர்ந்தன

பின்னர் ரசிகர்கள் மற்றும் ரசிகைகள் நீண்ட வரிசையில் பொறுமையாக காத்து நின்று டிக்கெட்டுகளை வாங்கிச் சென்ற னர். இந்த போட்டிக்கான டிக்கெட் விலை குறைந்தபட்சமாக ரூ.1,300 ஆக நிர்ணயிக்கப்பட்டு இருந்தது. அதிபட்ச டிக்கெட் விலை ரூ.6,500 ஆகும். ரூ.2,500, ரூ.5 ஆயிரம் விலையிலும் டிக்கெட் விற்பனை செய்யப்பட்டன. இதேநேரத்தில் ஒன்லைனிலும் டிக்கெட்டுகள் விற்பனை செய்யப்பட்டன. ரூ.1,300 விலை கொண்ட டிக்கெட் முதலில் விற்று தீர்த் தது. இதனை அடுத்து மாலை யில் எல்லா விலையிலான டிக்கெட்டுகளும் விற்று தீர்ந்தன. இதனால் டிக்கெட் வாங்கக் காத்து நின்ற சிலர் டிக்கெட் கிடைக்காமல் ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது.

# வயதான வீரர்கள் கூட்டம்தான் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி!



## இம்முறையும் சாதிக்குமா?

எம்.எஸ். தோனி தலைமையிலான சென்னை சூப்பர் கிங்ஸ் அணி இரு ஆண்டுகள் தடைக்குப் பின்னர் கடந்த சீசனில் மீண்டும் களமிறங்கிய நிலை யில் சாம்பியன் பட்டம் வென்று அனை வரையும் வியக்க வைத்தது. இறுதி ஆட்டத்தில் 8 விக்கெட்கள் வித்தியாசத் தில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியை வீழ்த்தி 3ஆவது முறையாக மகுடம் சூடியது. ேன் வாட்சன், அம்பதி ராயுடு ஆகியோர் துடுப்பாட்டத்தில் பெரிய அளவில் பங்களிப்பு செய்திருந்தனர். அதேவேளையில் அணியில் உள்ள 5 பந்து வீச்சாளர்கள் தலா 10 விக்கெட்க ளுக்கு மேல் வீழ்த்தியிருந்தனர். இம்முறை சேப்பாக்கத்தில் தனது சொந்த மைதான ஆட்டங்களை முழுமையாக விளையாடுவதை எதிர்நோக்கியுள்ளது சென்னை சூப்பர் கிங்ஸ் அணி.

மொத்த வீரர்கள்: 25
இந்திய வீரர்கள்: 17
வெளிநாட்டு வீரர்கள்: 8
அணிச்சேர்க்கை இதுதான்: -
தொடக்க வீரர்கள்: டு பிளெஸ்ஸிஸ், ேன் வாட்சன், முரளி விஜய்

நடுவரிசை வீரர்கள்: சுரேஷ் ரெய்னா, கேதார் ஜாதவ், அம்பதி ராயுடு, சைதன்யா பிஷ்னோய், சேம் பில்லிங்ஸ், துருவ் ஷோரே, ரித்துராஜ் கெய்க்வாட்.

விக்கெட் கீப்பர்கள்: எம்.எஸ். தோனி, என்.ஜெகதீசன்

பல்துறை வல்லுநர்கள்: ரவீந்திர ஜடேஜா, டுவைன் பிராவோ, மோனு குமார், டேட் வில்லி.

ரிஸ்ட் ஸ்பின்னர்: கரன் சர்மா, இம்ரன் தகிர்.

விரல் ஸ்பின்னர்: ஹர்பஜன் சிங், மிட்செல் சான்ட்னர்.

வேகப்பந்து வீச்சாளர்கள்: ஷர்துல் தாக்குர், தீபக் கார், கே.எம்.ஆஷிப், லுங்கி நிகிடி, மோஹித் சர்மா.

### பலம்

சென்னை அணியின் துடுப்பாட்ட வரிசை மிகவும் ஆழமானது. முன் ஒழுங்கில் ேன் வாட்சன், அம்பதி ராயுடு வலுவாக இருப்பதால் அதன் பின்னர் களமிறங்கும் வீரர்கள் எந்தவித அழுத் தமும் இல்லாமல் விளையாட முடிகி றது. கடந்த பருவகாலத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் நடு வரிசை யும், பின்கள வரிசையும் பலமாக இருந்ததால் பல ஆட்டங்களில் ஓவருக்கு 11 ஓட்டங்கள் மேல் விளாசப்பட்டது.

### கலவையான பந்து வீச்சு

மற்ற அணிகளைக் காட்டிலும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி கலவை யான பந்து வீச்சை கொண்டுள்ளது. கடந்த சீசனில் தனது சொந்த மைதா னத்தில் ஒரே ஒரு ஆட்டத்தை மட்டுமே விளையாடிய நிலையில் காவிரிப் பிரச்சினை போராட்டங்கள் காரணமாக எஞ்சிய ஆட்டங்களை புனேவில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி விளையாடியது. சுழற்பந்து வீச்சில் ஜடேஜா, இம்ரன் தகிர், மிட்செல் சான்ட்னர் ஆகியோரும் வேகப்பந்து வீச்சில் டேவிட் வில்லி, லுங்கி நிகிடி, தீபக் கார், ஷர்துல் தாக்குர் ஆகியோரும் பலம் சேர்த்திரு ந்தனர்.

### மாற்றங்கள்

கடந்த சீசனில் விளையாடிய 23 வீரர்களை அப்படியே தக்க வைத்துக் கொண்டது. மார்க்வுட், கனிஷ்க் சேத், கிஷ்திஸ் சர்மா ஆகியோரை விடுவித்தது. மாறாக மோஹித் சர்மா, ரித்துராஜ் கெய்க்வாட் ஆகியோரை புதிதாக ஒப் பந்தம் செய்துள்ளது.

### பலவீனம்

அணியில் உள்ள 25 வீரர்களில் 13 பேர் 30 வயதைக் கடந்தவர்களாக உள்ளனர். இதே காரணத்தால் கடந்த ஆண்டு வயதான அணி என விமர்சிக் கப்பட்ட போதிலும் வீரர்களின் அனுப வத்தை மூலதனமாக கொண்டு கிண் ணத்தை வென்றது சென்னை சூப்பர் கிங்ஸ் அணி. இம்முறையும் வயதான அணி என்ற விமர்சனங்கள் எழாமல் இல்லை. இறுதி கட்ட ஓவர்களில் பெரிய அளவில் ஓட்டக் குவிப்பை கட்டுப்படுத்தக் கூடிய பந்து வீச்சாளர் இல்லை.

கடைசி 5 ஓவர்களில் அதிக ஓட்டங் களை வாரி வழங்கும் 2ஆவது அணி யாக சென்னை சூப்பர் கிங்ஸ் உள்ளது. கடந்த சீசனில் முதலில் பந்து வீசிய ஆட்டங்களில் ஒரே ஒரு முறை மட்டுமே எதிரணியை கடைசி 5 ஓவர்களில் 40 ஓட்டங்களுக்குக் குறைவாக எடுக்க அனுமதித்தது. இதுபோல் இருமுறை மட்டுமே எதிரணியை 140 ஓட்டங்களுக் குள் மட்டுப்படுத்தியது.

**இதுவரை**

2008 - 2 -வது இடம்
2009 - அரை இறுதி
2010 - சாம்பியன்
2011 - சாம்பியன்
2012 - 2 - வது இடம்
2013 -2 - வது இடம்
2014 -அரை இறுதி
2015 - 3 - வது இடம்
2016 - இடை நீக்கம்
2017 - இடை நீக்கம்
2018 - சாம்பியன்

## ஜெனீவாவில் புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கூட்டமைப்பின் லண்டன் பிரிவுத் தலைவர் ஆர்.டி.இரத்தினசிங்கம், வண.பிதா எஸ்.ஜே. இமானுவல் ஆகியோருடன் சென்ற சுமந்திரன் அங்கு பிரிட்டனின் தெற்காசியப் பிரிவுத் திணைக்களத்தின் தலைமை அதிகாரியான பேர்குஸ் ஒல்டை கடந்த வெள்ளியன்று சந்தித்தார்.

அச்சமயமே மேற்படி புதிய பிரேரணையைக் கொண்டு வந்தமைக்காகக் கூட்டமைப்பின் நன்றியை பிரிட்டனுக்குத் தெரியப்படுதினார் சுமந்திரன்.

ஏற்கனவே இலங்கை தொடர்பாக 2015 இல் இலங்கையும் சேர்ந்து ஜெனீவாவில் நிறைவேற்றிய தீர்மானத்தில் கூறப்பட்ட விடயங்களை இலங்கை நிறைவேற்றுவதற்குத் திட்டவட்டமான கால வரையறைகளை விதிக்க வேண்டும் எனவும் –

புதியபிரேரணையைஇலங்கை நீர்த்துப் போக வைக்க இடமளிக்கக் கூடாது எனவும் –

இந்த மூவர் குழு பிரிட்டன் தரப்பை வலியுறுத்தியதாகவும் அறிய வந்தது.

## அதிநவீன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அபிவிருத்தி அமைச்சு 30 கோடி ரூபா நிதி ஒதுக்கியுள்ளது.

இந்த ஆண்டு 20 கோடி ரூபாவும், அடுத்த ஆண்டுக்கு 10 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டு அதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது என வலி. தெற்கு பிரதேச சபையின் தவிசாளரால் அனுப்பிவைக்கப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக்குறிப்பில் –

சுன்னாகம்பொதுச்சந்தையின் நவீன வசதிகளுடனான கட்டடத் தொகுதியை அமைக்கும் ஆரம்பப் பணிகள் மற்றும் அந்த திட்டத்தை விரைவுபடுத்துவதற்காகப் பிரதேச சபைத் தலைவர் க.தர்சனின் அழைப்பின்பேரில் அமைச்சர் மனோ கணேசன் நேற்றுக்காலை சுன்னாகம் சந்தைக்கு வருகை தந்தார். அவர் சந்தையின் கட்டமைப்பு தொடர்பாக வியாபாரிகள் மற்றும் பொது மக்களோடு கலந்துரையாடினார்.

இதன்போது சுன்னாகம் சந்தையினுடைய பெருமையினை வெளிப்படுத்துகின்ற பாரம்பரிய கட்டடத்தில் மாற்றம் ஏற்படாத வகையில் நவீன சந்தைத் தொகுதி அமைக்கப்பட வேண்டும் என முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபனால் சுட்டிக்காட்டப்பட்டது.

இவற்றைக் கவனத்தில் எடுத்த அமைச்சர், பெருநகர அபிவிருத்தி அமைச்சருக்கு இந்த விடயம் தெளிவுபடுத்தப்பட்டு இலங்கையின் சிறந்த சந்தைத் தொகுதியாக சுன்னாகம் சந்தையை மாற்றுகின்ற பணி விரைவுபடுத்தப்படும் எனத் தெரிவித்தார்.

இதன்போது போது வலி. தெற்கு பிரதேச சபையின் மற்றைய சந்தையான மருதனார் மடம் சந்தைக்கும் அமைச்சா மனோ கணேசன் சென்று அங்குள்ள நிலமைகள் தொடர்பாக ஆராய்ந்ததோடு மருதனார்மடம் மரக்கறி வியாபாரிகள் சங்கத் தலைவர் முகுந்தன் உட்பட வியாபாரிகளுடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கோட்டா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
லாக கட்சியின் வேறு ஒரு முக்கியஸ்தரை களமிறக்குவதையே இந்தியா விரும்புகிறது என்ற செய்தியை மஹிந்த ராஜபக்ஷவிடம் நாசூக்காகத் தெரிவித்துள்ளது இந்தியா.

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், இரகசியப் பயணமாகக் கொழும்பு வந்து, இந்தச்செய்தியை மஹிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்தார் என்ற விடயத்தை அறிய முடிந்தது.

அது மாத்திரமல்லாமல், ஐ.தே.க. தரப்பில் சஜித் பிரேமதாஸ களமிறங்குவதையே இந்தியா விரும்புகிறது என்ற செய்தியை ரணில் விக்கிரமசிங்கவிடமும் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் இலங்கைக்கு மிகமிக இரகசியமான பயமொன்றை மேற்கொண்டார் இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல்.

பாகிஸ்தான் எல்லைப் பதற்ற நிலைமையிலும், ஒருநாள் இலங்கை பயணத்தை அவர் மேற்கொண்டமை, பயணத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

எனினும், அவரது பயணம் பற்றிய செய்தி இலங்கை, இந்திய ஊடகங்கள் எதற்கும் கசியாதவாறு மிகமிக இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. அவரது பயணம் குறித்து செய்திகள் இதுவரை ஊடகங்கள் எதிலும் வெளியாகவில்லை.

கடந்த வாரம் இலங்கைக்கு குறுகிய விஜயமாக வந்திருந்த அஜித் டோவல், இலங்கையின் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் குறித்துநாடிபிடித்துபார்த்தமையுடன், ஜனாதிபதி வேட்பாளர்கள் தொடர்பான இந்தியாவின் எதிர்பார்ப்பை பிரதான இரண்டு தரப்புக்களின் தலைமைக்கும் தெரிவித்துள்ளார்.

மஹிந்தவைச் சந்தித்துப் பேசியபோது, கோட்டாபயவை களமிறக்கக் கட்சிக்குள் பெரும்பான்மை அப்பிராயம் இருப்பதாக, மஹிந்த தரப்பிலிருந்து சொல்லப்பட்டுள்ளது. மக்களின் ஆதரவுள்ள, வெற்றிபெறும் வேட்பாளர் தானே களமிறக்கப்பட வேண்டுமென மஹிந்த தரப்பிலிருந்து சொல்லப்பட்டது.

இதையெல்லாம் பொறுமையாக கேட்ட அஜித் டோவல், கோட்டாபய களமிறக்கப்படுவதை இந்தியா விரும்பவில்லை என்ற தகவலை நாசூக்காகத் தெரிவித்துள்ளார். கட்சியிலுள்ள பிறிதொரு முக்கியஸ்தரை களமிறக்குவதே நல்லதென்ற அப்பிராயத்தையும் அவர் தெரிவித்துள்ளார்.

அஜித் டோவலுடனான சந்திப்பு, இந்தியாவின் அபிப்பிராயத்தை அறிந்த பின்னரே, அவசர அவசரமாக கோட்டாபயதான் வேட்பாளர் என்ற முடிவை மஹிந்த தரப்பு எடுத்தது.

முன்கூட்டியே வேட்பாளரைத் தெரிவுசெய்தால், கட்சியின் முடிவு என்ற ரீதியில் அதிலிருந்து தப்பிக்கலாமென்ற திட்டத்துடனேயே, கோட்டாபயதான் வேட்பாளர் என்ற முடிவை மஹிந்த தரப்பு, அவசர அவசரமாக கடந்த வாரம் எடுத்தது.

இதேவேளை, இலங்கை இரகசிய பயணத்தின்போது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்து பேசினார் அஜித் டோவல். இதன்போது, ஐ.தே.க தரப்பின் வேட்பாளரை நாடிபிடித்து பார்த்தார். கரு ஜயசூரியதான் வேட்பாளர் என்பதை, ரணில் நேரடியாகவே சொல்லியிருக்கிறார். எனினும், சஜித் பிரேமதாஸவை இந்தியா விரும்பும் செய்தியை அஜித் டோவல் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்து, இரண்டு தலைவர்களைச் சந்தித்து, இந்தியாவின் நிலைப்பாட்டை இரகசியமாக தெரிவித்து விட்டு சென்றுவிட்டார் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல். (ஐ)

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எடுக்கப்படும்' என்று புதைகுழி அகழ்வுக்குப் பொறுப்பான சட்ட மருத்துவ நிபுணர் சமிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை, தடயவியல் விசாரணையாளர்களும், காணாமற்போனோர் பணியகத்தின் பிரதிநிதிகளும் மன்னார் நீதிவானைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

இதன்போது, மன்னார் புதைகுழி தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படும்.

றேடியோ கார்பன் அறிக்கை, மன்னார் புதைகுழி விடயத்தில், இறுதியானதாக இருக்காது. பார் – கோட் பரிசோதனை உள்ளிட்ட ஏனைய ஆய்வு அறிக்கைகளும், இறுதி முடிவு எடுக்கப்படும் போது, கருத்தில் கொள்ளப்படும் என் றும் சட்ட மருத்துவ நிபுணர் சமிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ஐ)

## கஞ்சாவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம்சிரேஷ்டபொலிஸ் அத்தியட்சகரின் கீழான சிறப்புக் குற்றத்தடுப்புப் பிரிவினரின் சுற்றுக்காவல் நடவடிக்கையின் போதே இருவரும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

ஒருவரிடமிருந்து 4 கிராம் 120 மில்லிக்கிராம் கஞ்சாபோதைப் பொருளும் மற்றவரிடமிருந்து 400 மில்லிக்கிராம் கஞ்சா போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர்கள் 34 மற்றும் 42 வயதுடையவர்கள். சந்தேக நபர்கள் இருவரும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் விசாரணைகளின் பின்னர் நாளை நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## போரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்-

யுத்தம் இடம்பெற்றபோது இராணுவத்தினர் சட்டவிரோத குற்றங்களிலோ, மனித உரிமை மீறல் செயற்பாடுகளிலோ ஈடுபடவில்லை. யுத்த காலத்தில் அவ்வாறான செயற்பாடுகளுக்கு இராணுவத் தலைமை மற்றும் அரசு அனுமதியளிக்கவில்லை.

ஆனால் யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில், அதாவது யுத்தம் நிறைவடைந்த பின்னர் சில சட்டவிரோதச் செயல்கள் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

எனவே அந்தக் காலப்பகுதியில் இடம்பெற்ற குற்றங்களுக்கான விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும். ஆனால் அவற்றிற்கான தீர்வுகள் உள்நாட்டு நீதிமன்றத்தினூடாகவே பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் – என்றார். (ஐ)

## ஜெனீவாவில் இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
லுள்ள குழு அறையில் இன்று நண்பகல் 12 தொடக்கம் 1 மணி வரை இடம்பெறவுள்ளது.


இந்தக் கூட்டத்தில் இலண்டன் மனிதவுரிமைச் செயற்பாட்டாளர் டிர்ட்றே மர்னோல், சுவிஸ் நாட்டின் மனிதவுரிமைச் செயற்பாட்டாளர் யூவிஸ் வோவி, பசுமை தாயகம் அமைப்பின் பிரதிநிதி மற்றும் தமிழக சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் செந்தில் மற்றும் பிரான்ஸ் மனிதவுரிமை தமிழர் நிலையத்தின் பொதுச் செயலாளர் எஸ்.வி. கிருருபாகரன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். (ஐ)

# சந்திரிகா மீண்டும் களத்தில்; சு.கவினருடன் முக்கிய பேச்சு!

கொழும்பு, மார்ச் 18

சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப் பினர்கள் சிலருக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாருக்கும் இடையில் இரகசியசந்திப்பொன்றுநடைபெற்றுள்ளதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவே ஜனாதிபதி வேட்பாளரைத் தீர்மானிக்கும் என மஹிந்த அணி திட்டவட்டமாக அறிவித்துள்ளதால், மைத்திரி தரப்பு கடும்



அதிருப்தியில் இருக்கின்றது.

இதனால், புதிய அரசியல் கூட்டணியை அமைப்பதிலும் சிக்கல் நிலை உருவாகியுள்ளது. இந்நிலையிலேயே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் சிலர், சந்திரிகா அம்மையாரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

இதன்போது பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் இன்னும் உத்தியோகபூர்வமாக எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை.

அதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடு திரும்பியுள்ள நிலையில், சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் இவ்வாரம் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கை வலைபந்தாட்ட அணியின் வீராங்கனை தர்ஜினி சிவலிங்கம் முதன்மை அதிதியாகக்கலந்துகொண்டு இவற்றை பயன்பாட்டுக்காகக் கையளித்தார்

உதைபந்து, கிரிக்கெட், தடகள விளையாட்டுகள், நீச்சல், உள்ளக விளையாட்டரங்கு உள்ளிட்ட பலவற்றைக் கொண்டமைந்த விளையாட்டு மைதானத்தின் அபிவிருத்திப் பணிகள் நீண்ட காலமாக-இழுபறியில் இருந்து வந்தன.

இந்த நிலையில் நீச்சல் தடாகம் மற்றும் உள்ளக விளையாட்டரங்கு ஆகியவற்றின் பணிகள் மாத்திரம் நிறைவுற்ற நிலையில் அவை நேற்றுத் திறந்து வைக்கப்பட்டன.

ஏனைய பணிகள் மேற்கொள்ளப்படாமல் உள்ள நிலையில் நேற்று மீண்டும் சர்வதேச தரத்திலான கிரிக்கெட் மைதானத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு, தொலைத்தொடர்பு விளையாட்டுத் துறை அமைச்சர் ஹரீன் பெர்ணாடோ, கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஆகியோர் அடிக்கல் நாட்டி வைத்தனர்.

இந்த நிகழ்வில் விளையாட்டு அமைச்சின் செயலாளர், இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர், விளையாட்டு உத்தியோகத்தர்கள், வீர வீராங்கனைகள், பொது மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)

## விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
டுள்ளார்.

மன்னார் – தலை மன்னார் பிரதான வீதியில் நேற்றுப் பிற்பகல் இந்த விபத்து இடம்பெற்றது.

மன்னார் சாந்திபுரத்தைச் சேர்ந்த வி.விமலதாசன் (வயது -49) என்ற தனியார் பஸ் உரிமையாளரே உயிரிழந்தவராவார்.

மன்னாரில் இருந்து தலைமன்னார் நோக்கி தம்பதி மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது, தலைமன்னாரில் இருந்து மன்னார் நோக்கிப் பொருள்களுடன் பயணித்த பாரவூர்தி மோட்டார் சைக்கிளுடன் மோதியமையால் இந்த விபத்து ஏற்பட்டது என்று ஆரம்ப விசாரணைகளையடுத்து பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார்சைக்கிளில்பயணித்த குடும்பத்தலைவர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார். அவரது மனைவி படுகாயமடைந்து, சிகிச்சைக்காக மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்துக்கு காரணமான பாரவூர்திச் சாரதி கைது செய்யப்பட்டமையோடு மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## ஊற்றங்கரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
டுள்ளதாக முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை ஊற்றங்கரைப் பிள்ளையார் ஆலயத்தின் தெற்கு வாசல் இரும்புக் கம்பி கொண்ட கேற் உடைத்த திருடர்கள் அதன் ஊடாக உள்நுழைந்து ஆலய முதன்மைப் பீடம் அமைந்துள்ள பகுதியின் தெற்கு வாசல் கதவை உடைத்து மூலஸ்தானத்தில் பிள்ளையாருக்கு சாத்தப்பட்ட வெள்ளிக் கவசம், அதன் வெள்ளிக் குடை, வெள்ளி ஆபரணங்கள் அனைத்தையும் திருடிச் சென்றுள்ளார்கள்.

இந்தச் சம்பவம் குறித்து ஆலய நிர்வாகம் முள்ளியவளை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளது.

இதனை அடுத்து கிளிநொச்சியில் இருந்து தடயவியல் பொலிஸார் வரவழைக்கப்பட்டு தடயங்களைப் பதிவு செய்துள்ளனர். (ஐ)

## ரூ.1 கோடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்ற குற்றச்சாட்டில் அதே இடைத்தைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரும் கடற்படையினரும் முன்னெடுத்தநடவடிக்கையிலேயே இந்த கேரளக் கஞ்சா கடத்தல் முயற்சி முறியடிக்கப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் போதைப்பொருள்தடுப்புபொலிஸ் உத்தியோகத்தர்களும் கடற்படையினரும் இணைந்து பருத்தித்துறை திக்கம் பகுதியில் கடத்தலுக்கு தயாராகவிருந்து நிலையில் 88 கிலோ 76 கிராம் நிறையுடைய கேரள கஞ்சாப் பொதிகளைக் கைப்பற்றினர்.

அதன்பெறுமதி ஒரு கோடியே 33 லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. அதனைக் கடத்த முயற்சித்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் இருவரும் பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டமையுடன், சான்றுப் பொருளும் கையளிக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்கள் இருவரும் பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)






# தமிழின அழிப்புக்கு சர்வதேசத்திடம் நீதி கோரி லண்டனிலும் ஆர்ப்பாட்டம்

லண்டன், மார்ச்18

தமிழின அழிப்புக்கு நீதி கோரி யாழ் பல்கலைகழக மாணவர்களால் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படட எழுச்சிப் பேரணிக்கு ஆதரவாக பிரித்தானியா பல்கலைகழக மாணவர்களும் லண்டனில் அமைந்திருக்கும் வெளியுறவு மற்றும் பொதுநலவாய அலுவலகத்தின் முன்பு காலை 10 மனியிலிருந்து மதியம் 12 மணிவரை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்கள் தங்கள் கோரிக்கைகளை கோஷங்களாக ஓங்கி ஒலித்தனர். அவற்றைப் பதாகைகளிலும் வரைந்து தாங்கியிருந்தனர்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்குக் கால அவகாசம் வழங்க கூடாது, சர்வதேச விசாரணை நடத்த பட வேண்டும். இலங்கை விடயத்தை ஐ.நாவின் பாதுகாப்பு சபையிடம் பாரப்படுத்த வேண்டும் என்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன. இந்தப் போராட்டத்தில் பல அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டார்கள்.

# ஐ.தே.மு. - சிறிசேன கூட்டு அரசு கசப்பான பட்டறிவையே தந்தது!

## கலேவலயில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு







கலேவல, மார்ச்18

ஐக்கிய தேசிய முன்னணி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவையும்சேர்த்துக்கொண்டு அமைத்திருந்த அரசாங்கம் கசப்பானஅனுபவங்களையேபெற்றுத்தந்துள்ளது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நகர திட்டமிடல்,நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சருமானரவூப்ஹக்கீம்தெரிவித்தார்.

மாத்தளை மாவட்டத்தில், கலேவலயில் நிர்மாணிக்கப் பட்டுள்ள நீர் வழங்கல், வடிகால் அமைப்பு சபையின் புதிய அலுவலக கட்டடத்தின் திறப்புவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற போது அதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அமைச்சர் ஹக்கீம் அங்கு உரையாற்றுகையில் மேலும் கூறியவை வருமாறு:-

கடந்த ஆண்டு ஒக்போபர் 26 ஆம்திகதிஎங்களை அரசாங்கத்திலிருந்து வெளியேற்றியதன் மூலம் 52நாள்கள் எங்களுக்குத் தற்காலிகமான ஓய்வைத் தந்திருந்தனர். ஆனால் நாங்கள் ஓய்ந்திருக்கவில்லை. வீதியில் இறங்கிப் போராடி, ஆர்ப்பாட்டங்கள் நடாத்தி, நீதிமன்றத்தின் மூலம் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியிருக்கிறோம். அந்தப் போலி அரசாங்கத்தின் 52 நாள்கள் நடந்த கள்ளத்தனமான ஆட்சியில் இந்த நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி, தற்போதைய ஜனாதிபதியுடன் இணைந்து செய்த சூழ்ச்சியும், சதியும் இந்த நாட்டின் பொருளாதாரத்தில் வீழ்ச்சியை மட்டுமல்ல, சர்வதேச மட்டத்தில் இந்த நாட்டுக்கு இருந்த கீர்த்தியை இல்லமலாக்கிபாரியகளங்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் வெளிநாட்டுஉதவிகளைப்பெறும் வாய்ப்பையும் வெகுவாகக் குறைத்து விட்டது. பெரிய அளவில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திச் செயல் திட்டங்களும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன. இது இந்த நாட்டுக்கு இழைக்கப் பட்ட மிகப்பெரிய துரோகமாகும்.

ஐக்கிய தேசிய கட்சி சிறுபான்மைகட்சிகளோடுஇணைந்து இப்போது அரசாங்கத்தைக் கொண்டு செல்கிறது. ஏனைய கட்சிகளுக்கு அவர்கள் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் எங்களுடன் ஒத்துழைப்பதைத் தவிர வேறுவழியில்லை. வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பில் சுமார் 27 பேர் வாக்களிக்காமலேயே நழுவிச்சென்று விட்டமையும் இதனை உறுதிப்படுத்துகிறது. அத்துடன் இப்பொழுது எதிர்கட்சியினருக்குள்ளும் ஒற்றுமை இல்லாமல் போய்விட்டது. இதனை வைத்துக்கொண்டு மஹிந்த ராஜபக்ஷ இப்பொழுது அரசாங்கத்தைத் தோற்கடித்திருக்கலாமே என்று கூறித்திரிகின்றார்.அவ்வாறு எங்களைத் தோற்கடித்துவிட முடியாது. தமிழ் தேசிய கூட்டமைப்பு எங்களோடு இருப்பதுடன் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையும் இருக்கிறது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சினருக்கு, மொட்டுக்கட்சியினரோடு கூட்டுச்சேர விருப்பமில்லாதமை போலவே தோன்றுகின்றது. தொடர்ந்தும் அவர்களுக்கிடையில் பேச்சுகள் இடம்பெறுகின்றனவாம். என்னவாக இருந்தாலும் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் அமோக வெற்றியீட்டக் கூடிய வேட்பாளருடன் களமிறங்கவுள்ளோம். இதை சகித்துக் கொள்ள முடியாமல் தங்களது உட்பூசல்களைத்தீர்த்துக்கொள்ள வழியின்றி அவர்கள் திண்டாடிக் கொண்டிருக்கின்றனர்.

நாம் ஆட்சிக்கு வந்த 2015 ஆம்ஆண்டுதொடக்கம்இதுவரை இந்நாட்டு மக்களுக்கு சுத்தமான குடிதண்ணீரைப்.பெற்றுக்கொடுப்பதற்கு 11 ஆயிரத்து 500 கோடி ரூபா முதலீடு செய்யப்பட்டுள்ளது. இது மிகப் பெரிய தொகையாகும். இதைவெறும் பணத்தால் கணக்கிட முடியாது. மாறாக, இது மக்களின் நிரந்தரமான குடிதண்ணீர்த் தீர்வுக்கு வழி கோலுகின்றது. அவ்வாறே நாடு முழுவதிலும் 1000 கிராமங்களுக்கு சமூக நீர்வழங்கல் திட்டங்களின் ஊடாக இந்த வருடத்தில் சுத்தமான குடிதண்ணீரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். இம்மாதம் முதல் இவ்வருடத்தில் செப்டம்பர் மாதத்துக்குள் இந்தச் செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்படவுள்ளன.

நேற்று மாத்தறையில் நடைபெற்ற கூட்டத்தில் சுத்தமான குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு வரவு - செலவு திட்டத்தின் மூலம் இவ்வாண்டின் முற்பகுதியில் 150 கோடி ரூபாவும் வருடத்தின் இறுதிப்பகுதியில் மேலும் 150 கோடி ரூபாவும் ஒதுக்குவார் என நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். - என்றார்.

## மரண அறிவித்தல்



### வைரமுத்து றஞ்சன்

(பாலன்)

பிறப்பு 1961.01.27

இறப்பு 2019.03.14

அன்னாரின் பூதவுடல் நாளைமறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு காட்டுப்புலம் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்

கெருடாவில், தொண்டமனாறு. - குடும்பத்தினர்.

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை
கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள்
பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10, மாநகரசபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536

நெல்லியடியில் – இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576

சாவகச்சேரியில் – இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

கிளிநொச்சியில் – இல.10, கண்டி வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (தம்ரோ காட்சியறை அருகில்). 076 443 1576